
MARCH - APRIL 2001 விக்கிரம - பங்குனி

ரூபா 25/-

# சைவநீதி

# SAIVANEETHI



## சிவயோகசுவாமிகள் குருபூசைச் சிறப்பிதழ்

# சைவ சமய உயர் தகமைத் தேர்வுப் போட்டி

சைவ சமய உயர் தகமைத் தேர்வுப் போட்டி முன்னர் குறிப்பிட்ட இடங்களில் 22. 04. 2001 ஞாயிறு காலை 10 மணி தொடக்கம் 11.40 வரை நடை பெறும்.

14.04.2001 இற்கு முன்னர் அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது பரீட்சை நிலையத்திற்குச் சென்று மேற்பார்வையாளரிடம் தம்மை அடையாளப்படுத்தி போட்டியிற் பங்கு கொள்ளலாம்.

**- நிர்வாக ஆசிரியர்**

# *சைவசமயக் கட்டுரைப் போட்டி*

“சைவநீதி ” ஐம்பதாவது இதழ் வெளிவருவதை முன்னிட்டு மாணவரிடையே சைவசமய அறிவையும், எழுத்தாற்றலையும் விரிவடையச் செய்யும் நோக்கோடு கட்டுரைப் போட்டி ஒன்று நடைபெற உள்ளது.

✶ போட்டி கீழ்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

✶
கீழ்பிரிவு – தரம் 6,7,8
மத்தியபிரிவு – தரம் 9,10,11
மேற்பிரிவு – தரம் 12,13

✶ கீழ்ப்பிரிவு மாணவர்: “திருக்கோயில் வழிபாடு” அல்லது “சிவசின்னங்கள்” பற்றி 400 சொற்களுக்குக்குறையாது எழுதுதல் வேண்டும்.

✶ மத்தியபிரிவு மாணவர்: “ஆறுமுக நாவலரின் சமயப்பணி” அல்லது “திருக்கேதீஸ்வரம்” பற்றி 700 சொற்களுக்குக் குறையாது எழுதல் வேண்டும்.

✶ மேற்பிரிவு மாணவர்: “சமூகப் பணியிற் சமயக்குரவர்” அல்லது “அன்றாடவாழ்வில் சைவசமய ஒழுக்கம்” பற்றி 1000 சொற்களுக்கு குறையாது எழுதல் வேண்டும்.

✶ கட்டுரைகள் யாவும் மாணவரின் சொந்த ஆக்கம் என்பதைப் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்துவதுடன் மாணவரின் பெயர், பிறந்த திகதி, தரம், முதலியனவும், அதிபரினால் உறுதிப்படுத்தப்படவேண்டும். அதிபரினால் உறுதிப்படுத்தப்படாத கட்டுரைகள் நிராகரிக்கப்படும்.

✶ கட்டுரைகள் யாவும் 25.04.2001அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாகப் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

**Editor ( Administration)**
**C/O S. Sathashivam. Esqr**
**3.B 46th Lane**
**Colombo - 6**
**T.P 507325**

✶ ஒவ்வொரு பிரிவிற்கும்

**முதற்பரிசு தங்கப் பதக்கம்**
**இரண்டாம் பரிசு வெள்ளிப் பதக்கம்**
**மூன்றாம் பரிசு வெண்கலப் பதக்கம்** வழங்கப்படும்.

உ
சிவமயம்
" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

சைவநீதி

மலர் 4 விக்கிரம பங்குனி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் - 12

# அன்பு செய்தல்

உயிர்களிடத்தில் அன்பு வேண்டும். அந்த அன்பு இறைவனுக்குச் செய்யும் அன்பிற்குச் சமனாகும் உயிர்கள் அனைத்தினுள்ளும் இறைவன் இருக்கிறான். ஆதலால் உயிர்களுக்குச் செய்யும் அன்பு இறைவனுக்குச் செய்யும் அன்பேயாகும்.

பிறர் துன்பத்தைத் தன் துன்பம் என நினைத்துத் துன்பத்தைத் தீர்த்தலே அன்புடைமையாகும். தன் நலத்தைப் பெரிதுபடுத்துவர், எல்லாவற்றையும் தமது உடைமையாக எண்ணு பவர் தான் சிறப்பாக வாழ்ந்தால் போதும் என்று எணிணு பவர் அன்பில்லாதவர். பிறர் நன்றாக இருப்பதில் மகிழ்ச்சியடைந்து தான் கெட்டாலும் தக்கார் கெடக் கூடாது என்று பிறருக்குப் பயன்படும் எனின் தமது உடல் உறுப்பைக் கொடுத்து பிறரின் துன்பத்தைத் துடைப்பவர் தாம் அன்புடையவர்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு - என்றார் வள்ளுவர்.

அன்பு இல்லாதவர்கள் விழாக்கள் செய்தென்ன? பணிகள் செய்தென்ன? கண் மூடித் தவம் செய்தென்ன? எதுவும் பயனில்லை. "காடேதிரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தை சுற்றி ஓடே எடுத்தென்ன உள் அன்பிலாதார்" என்பர் பட்டணத்தடிகள்.

இறைவனிடம் அன்பு செலுத்துதல் போல அடியவரிடம் அன்பு செலுத்தல் வேண்டும். குருவினிடம் அன்பு செலுத்துதல் வேண்டும். குருவினிடம் அன்பு செலுத்தினால் குருவருள் பெருகி ஞானம் கை கூடும். நம்நாட்டில் தோன்றய ஞானகுரு சிவயோக சுவாமிகள். சமய சமூகத் தொண்டாற்றி அன்பு நெறியில் மக்களை நெறிப்படுத்திய சவாமிகள் குருபூசைச்சிறப்பு மலராக சைவநீதி வெளிவருகிறதீ

உ
சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...


1. அன்பு செய்தல் ............ 01
2. பொருளடக்கம் ............ 02
3. திருப்புகலூர் பதிகம் ............ 03
- சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது
4. நினைவிற் கொள்வதற்கு ............ 04
5. சிவயோக சுவாமிகள் அருளிச் செய்த அருங்கனிகளிற் சில ............ 05
6. கருணை மழை பொழிந்த வள்ளல் ............ 06
- வித்வான் வ செல்லையா
7. தல வரலாற்றுச் சுருக்கமும் சித்திரத்தேர் வெள்ளோட்டமும் ............ 08
- வி. எஸ். தேவகுமாரன்
8. கீர்த்தனம் ............ ஞானக்கவிமணி ............ 11
9. சைவசமயமும் சேவையும் ............ 12
- திரு. ச. மு. பிள்ளை அவர்கள்
10. சிவாலயகைங்கரியவியல் ............ 13
- ஆறுமுகநாவலர்
11. சித்திரை ஆதிரைநாள் ............ 18
- மட்டுவில் ஆ. நடராசா
12. சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர் உண்மை விளக்கம் ............ 21
- மெய்கண்டார் அடியவன்
13. மீனாட்சியம்மை திருமணம் - ............ திருமுருக கிருபானந்த வாரியார .. 23
14. **UMADEVI'S PENANCE** ............ - .V. Sivarajasingam ............ 26


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய

# திருப்புகலூர் பதிகம்

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந் திச்சைபேசினுஞ்
சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்மமையாளரைப் பாடாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு
மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனே விறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
பொடிகொள்மேனியெம் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேலம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்பெரி துடையனேகற்று
நல்லனே சுற்ற நற்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று
பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாயம ருலகமாள்வதற்
கியா துமையுற வில்லையே. 3

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துட
னடுங்கி நிற்குமிக் கிழவனை
வரைகள்போற்றிர டோளனே யென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்ளே றுடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
நெஞ்சினோயறுத் துஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்று
நரைத்தமாந்தரை யிளையனே
குலமிலாதானைக் குலவனேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமராதம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந் தோளனேயென்று
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றோபுல வோர்க்கெலா மென்று
சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன் றுகண் குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போ யண்டமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலு
மீக்குமீகில னாகிலும்
வள்ளலேயெங்கண் மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புள்ளெலாஞ் சென்று சேரும்பூம்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ள ற்பட்டழுந் தாதுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று
மொழியினுங்கொடுப் பாரிலை
பொத்திலாந்தைகள் பாட்டறாப்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
அத்தனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கொர் காமனேயென்றுஞ்
சாலநல்வழக் குடையனே
கையுலாவிய வேலனேயென்று
கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கையாவியின் மேதிபாய்புக
லூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாயம ருலகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங் கமலமோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழி னாவலூரன்வ
னப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்று சேர்வதற்
கியாதுமையுற வில்லையே. 11

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2001 | சனி | விஷு வருடப்பிறப்பு. |
| | 06 | 19.04.2001 | வியாழன் | திருநாவுக்கரசர் குருபூசை. |
| | 08 | 21.04.2001 | சனி | சனிப்பிரதோஷவிரதம். |
| | 10 | 23.04.2001 | திங்கள் | அமாவாசை விரதம். |
| | 11 | 24.04.2001 | செவ்வாய் | சித்திரைப்பரணி வைபவ விரதம்<br>சிறுத் தொண்டர் குருபூசை |
| | 12 | 25.04.2001 | புதன் | கார்த்திகை விரதம். |
| | 13 | 26.04.2001 | வியாழன் | மங்கையர்க்கரசியார் குருபூசை |
| | 14 | 27.04.2001 | வெள்ளி | சதுர்த்தி விரதம். |
| | 15 | 28.04.2001 | சனி | விறன்மிண்டன் குருபூசை |
| | 16 | 29.04.2001 | ஞாயிறு | ஷஷ்டி விரதம். |
| | 22 | 05.05.2001 | சனி | சனிப்பிரதோஷவிரதம்,<br>உமாபதிசிவாச்சாரியார் குருபூசை. |
| | 23 | 06.04.2001 | ஞாயிறு | சித்திரைச் சித்திரை,<br>இசைஞானியார் குருபூசை |
| | 24 | 07.05.2001 | திங்கள் | சித்திராபூரணை விரதம்<br>சித்திரகுப்த விரதம்,<br>திருக்குறிப்புத்தொண்டர் குருபூசை |
| | 28 | 11.05.2001 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி விரதம். |

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். 121

அடக்கமாகிய நற்பண்பு, ஒருவனை உயர்த்தி தேவருலகில் சேர்க்கும் அடங்காமையாகிய தீப்பண்பு ஒருவனைத் தாங்குவதற்கு அரிய இருளுலகில் சேர்த்து விடும்.

# சிவயோக சுவாமிகள் அருளிச் செய்த அருங்கனிகளிற் சில

திங்கட் சடையாய் எங்களை யுடையாய் சிவனே ஓம்
சீரிய அடியார் சிந்தையிலுறையும் செல்வா ஓம்
மங்கையை யுடையாய் மழவிடை யானே மாதவனே ஓம்
மண்ணும் விண்ணும் ஒன்றாய் விளங்கும் மணியே ஓம்
அங்கையி லங்கி தங்கிய பரனே அரனே ஓம்
ஆருயி ரெல்லாம் நீயே யாகி அமர்ந்தாய் ஓம்
கங்குலும் பகலும் இல்லாக் காட்சி தருவாய் ஓம்
கருதும் நல்ல அடியாரை என்றும் காப்பாய் ஓம். 1
(நற்சிந்தனை பக். 145)

ஒன்றெனக் கும்பிடுவாய் மனமே இந்த
உலகுயிர் பரமென ஒளிரும் மெய்ப்பொருளை
- ஒன்றெனக் கும்பிடுவாய்
உண்டில்லை என் றவரும் ஓதமுடியாததாய்
பண்டும் இன்றும் என்றும் அப்படி உள்ளதாய்
- ஒன்றெனக் கும்பிடுவாய்
நன்றுக்கும் தீதுக்கும் நடுவாய் உள்ளதாய்
ஞான யோக தியானத்தில் வருவதாய்
கன்றிய காமனைக் கண்ணால் எரித்ததாய்
கால காலனைக் காலால் உதைத்ததாய்
- ஒன்றெனக் கும்பிடுவாய். 2
(நற்சிந்தனை பக். 175)

நின்று மிருந்தும் நடந்தும் நினைமின்
பொன்று முடலைப் போற்றுத லொழிமின்
நன்றுதீ தெனும் நாட்டம் விடுமின்
அன்று மின்றும் என்று மான்மா
இருந்த படியே இருக்கும் சீரை
அருந்தவ யோக ரறிந்தாங் கறிந்து
தெளிந்து சீவன் முத்தராய் உலகில்
பொருந்தி வாழ்தல் போற்றுந் தகைத்து. 3
(நற்சிந்தனை பக். 23)

அல்லல் அற்று வாழவழி சொல்லு சிவமே
அகம் பிரமாஸ்மியென்று சொல்லு சிவமே
எல்லார்க்கும் நல்லனென்று சொல்லு சிவமே
எல்லாஞ் சிவன் செயலாய்ச் சொல்லு சிவமே
நில்லாதிவ் வாழ்வென்று சொல்லு சிவமே
நீயுநானு மொன்றென்று சொல்லு சிவமே
பொல்லாப்பிங் கில்லையென்று சொல்லு சிவமே
புத்தடியோம் நாங்களென்று சொல்லு சிவமே. 4
(நற்சிந்தனை)

உணர்ந்தார்க் குணர்வரிய ஓங்கார மெய்ப்பொருளை
கணந்தான் மறவாமல் கைதொழவாய் என்மனமே
சித்தத்துள் தித்திக்கும் தெள்ளமுதைத் தெய்வத்தை
எத்திக்கும் போற்றுதற்கு என்பின்னே வாமனமே. 5.
(நற்சிந்தனை)

மந்திரமாய்த் தந்திரமாய் மருந்தாகி விருந்தாகி
எந்திரமாய் என்றுணையாய் எல்லாமாய் அல்லவுமாய்ச்
சந்திரனாய்ச் சூரியனாய்ச் சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை கண்டார்கள் பிறவாரே. 6.
(நற்சிந்தனை பக். 126)

பஞ்சப்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி. 7.

செல்வர் பின் சென்று தினமலையாமல்
நல்வரந் தருவாய் ஞானிகள் நாட்டமே
சில்பக றோன்றிச் சிதையா வண்ணம்
எல்லையில் கால மென்றனுக்கருளி
ஓதுக அதுநலம் ஓம்தத் சத்ஓம். 8.

உள்ளத்தினுள்ளே யுலாவு மொருவனை
எள்ளத்தனையும் மறவா தேகத்தினால்
பள்ளத்தில் வீழ்ந்து பரதவியோமே
உள்ளத்தைச் சொனனோ முயிர்த்துணை யிதுவே
ஒதுவது நாம் ஓம் தத் சத் ஓம். 9.
(நற்சிந்தனை பக். 173)

இப்பிறவி தீர்ப்பானை இனிப்பிறவா தருள்வானை
எப்பிறப்பும் என்னோடே யுடனாக இருந்தானை
ஒப்பில்லா ஒருவனாய் ஊழியெல்லாம் நின்றானைச்
செப்புமவ ரினிப்பிறப்போ டிறப்பினையே சேராரே. 10.
(நற்சிந்தனை பக். 127- 10)

Self - Control will place (a man) among the gods, - the want of it will drive (him) into the thickest darkness (of hell). 121

# கருணை மழை பொழிந்த வள்ளல்

- வித்துவான் வ. செல்லையா

சிவயோக சுவாமிகள் கருக்கொண்ட காளமேகம். அதுவும் கருணை மழை பொழியும் காளமேகமாகக் காணப்பட்டார்

காளமேகம் என்ற பெயரில் ஒரு புலவர் இருந்தார். அவரோ "இம்மென்னுமுன்னே" எழுநூறு எண்ணூறு பாடல்களைப் பாடி "அம்மென்றால்" ஆயிரம் பாட்டுக்களைப் பாடவல்லவர். எங்கள் சிவயோக சுவாமிகள் என்ற காளமேகம் கருக்கொண்டு வருஷித் தவையோ எண்ணிலடங்கா நற்சிந்தனைகள். அதனைக் கருணை மழையென்றல்லவா சொல்ல வேண்டும். மழை போல் கைமாறு கருதாது ஈந்தவரை வள்ளல் என்றுதான் கூறவேண்டும். வள்ளல் என்றால் வரையாது வழங்குபவர் என்பது பொருள். கேளாதும் கேட்டதற்கு மேலும் பொருட்களை அள்ளி யள்ளி வழங்கியவரே வள்ளல். சிவயோக சுவாமிகள் நடமாடும் தெய்வமாக இருந்து கொண்டு ஆங்காங்கே நடமாடிக் கருணை யைப் பொழிந்து வந்தார். அவர் வற்றாத ஊற்று. அருளை வரையாது வழங்கிய வள்ளல்.

இவ் வள்ளலாகிய மலரிலே தேன் குடிக்க வண்டுகள் பல பறந்தோடி வந்து தேன் பருகி யுள்ளன. அமெரிக்கா (காவாய்) இங்கிலாந்து, ஜேர்மனி முதலாம் இடங்களில் இருந்தல்லவா பாதமலரில் தேன் பருக வந்தார்கள். வந்த வர்கள் அதனை அமுதென அள்ளிப் பருகி வாழ்ந்து வருகிறார்கள். அன்றியும் அன்னார் சிவயோக சுவாமிகள் உபதேசித்த வழி நின்று சைவச் செந்நெறியை அங்காங்கே நிறுவனம் அமைத்து வளர்க்கிறார்கள். காவாயில் ஸ்ரீ சுப்பிரமணிய சாமியவர்களின் சைவப்பணி போற்றத்தக்கதாக அமைந்துள்ளது குறிப் பிடத்தக்கது.

நாம் எல்லோரும் "தண்டேனுடன் பிறந்தும் தண்டேன் நுகராமண்டுகங்கள்" போன்று இருந்தோம் - இருந்தே விட்டோம்.

எப்படியும் சுவாமிகள் கருணையைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. "புத்தியுள்ள தந்தை தன் ஊதாரிப் பிள்ளைக்கு அன்புள்ளங் கொண்டு நிதி சேர்த்து ஒரிடத்தில் பக்கு வமாக வைத்து அதனைப் பேணிக் காத்து வந்தான். தந்தை தன் மரணப் படுக்கையிலே மகனை அழைத்து, நீ வாழமுடியாது இறக்கும் போது எங்கேயாவது சென்று இறந்து விடாதே. தவறாது வீட்டுக்கு வந்து அதோ துலாந்தில் அப்பலகை மீது கயிறு ஒன்று போட்டிருக்கிறேன். அதில் தூங்கிச் சா என்று அன்புருகக் கூறிவிட்டு இறந்தார். மகன் தந்தையின் கடமைகளை நிறைவேற்றி விட்டு இருந்த கைப்பொருளோடு நண்பர் களுடன் சேர்ந்து யாவையும் செலவு செய்து விட்டான். தந்தை கூறியபடி வாழ முடியாது தற்கொலை செய்ய வேண்டிய நிலை வந்தது. அப்போது தந்தையார் கூறிய உபதேசம் அவன் நினைவுக்கு வந்தது. ஓடோடித் தற்கொலை செய்ய வீட்டுக்கு வந்தான். அங்கு அவனைத் தடுக்க யாரும் இருக்க வில்லை. தனி மனிதனின் மரணம் யாருக் குத்தான் கவலை தரப்போகிறது! அவன் வீட்டைத் திறந்து உள்ளே சென்றான். துலாந்துப் பலகை மீது இருந்த கயிற்றில்

காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு. 122

அடக்கத்தை உறுதிப் பொருளாகக் கொண்டு பேணிக் காக்க வேண்டும்.
மக்களுக்கு அந்த அடக்கத்தை விடச் சிறந்த ஆக்கம் இல்லை.

தூங்கிய போது பலகை மெல்லியதாக இருநத்தால் முறிந்து விட்டது. என்னே அதிசயம் ! தந்தையின் பணப் பொட்டணம் அவிழ்ந்து அவன்மீது பொன்மாரியெனச் சொரிந்தது. அப்பொழுது இறவாது நிலத்தில் விழுந்த அவன், பணத்தைக் கைகளால் அள்ளிக் கண்களில் ஒற்றித் தந்தையின் கருணையுள்ளத்தை நினைந்து கண்ணீர் சொரிந்து அழுதான் பின்னர் அவன் செந்நெறிப்பட்டு வாழ்ந்து வந்தான்.

இங்கு இக்கதையை நாம் நினைவு கூரவேண்டும். மகனிற் கருணையுள்ளம் வைத்து நிதி சேர்த்து வாழ்க்கையை வளம் பண்ணிய தந்தையைப் போன்று சுவாமிகளும் நம்மீது கொண்ட பெருங் கருணையால் நமக்கும் கருணை மழையைப் பொழிந்து விட்டுச் சென்று புதையலைப் புசிக்கின் றார்களோ என்று பார்த்த வண்ணமிருக் கின்றார்கள்.

"கள்ளத்திறைவர் துயர் கருதித்தம் கருணை வெள்ளத்தலைவர் மிக"

என்பதற்கமைய எம்மை நோக்கிப் பார்த்தபடியேதானிருப்பார்கள். அவர் தேடித்தந்துவிட்டுச் சென்ற பொக்கிசங்கள் தான் என்ன? அதனைச் சிந்திக்க வேண் டாமோ? அவை நமக்கு அழியாத "முதுசொம்"

அவற்றில் முதலாவதாகக் கூறக் கூடியது நற்சிந்தனைகள் அவர் வழி நின்றோர் நற் சிந்தனைகளை நூலாக ஆக்கித் தந்துள்ளனர், அது வற்றாதவூற்றன்றோ? அதனை அள்ளிப் பருகி வாழ்க்கையை வழமாக்கலாமே?

இரண்டாவதாகவுள்ளது சிவதொண்டன் இதழ். இதில் எத்தனை எத்தனை அருட் கருத்துள்ள கருவூலங்கள், அவற்றினை ஏற்று மனங் கொண்டு நம் வாழ்க்கையை வளமாக் கலாமே.

மூன்றாவது சிவதொண்டன் நிலையம் ஆகும். இது குரு லிங்க சங்கம வழிபாடு களுக்கு ஏற்ற தலம் அன்றோ? அடியார் திருக் கூட்டத்தோடு திருவடி பூசைக்கு வழி வகுத்துத் தந்த குருமூர்த்தியாகிய சுவாமி களை என்றும் மனத்திருத்தித் தொழு வோமாக.

இங்கு ஒரு விஷயத்தைக் கூற விரும்பு கின்றேன் சுவாமிகளின் நற்சிந்தனைகளும் அவர்களின் கருத்துக் கருவூலங்களும் என்றும் நிலைத்து நின்று மக்களுக்கு வழிகாட்டக் கூடியன என்பதே அதுவாகும். அத்துடன் சர்வகலாசாலை பட்டப் பின் படிப்பு மாணவர்களுக்கு ஆய்வுக்குரியனவாகவும் அமைந்துள்ளன. இதனை அனைவரும் மனங்கொள்வாராக

Let self - control be guarded as a treasure, there is no greater source of good for man than that. 122

## வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்
# தல வரலாற்றுச் சுருக்கமும் சித்திரத்தேர் வெள்ளோட்டமும்

- வி.எஸ்.தேவகுமாரன்

வீரமாநகரம் என்று புராண இதிகாசங்களில் சிறப்பித்துக் கூறப்படும் இலங்காபுரியின் இருதய ஸ்தானமாக விளங்குவது வவுனியா நகரம். அந்நகர மத்தியில் புகையிரத நிலையம், கமநலச் சேவை நிலையம், அரச விடுதிகள் சூழ்ந்திருக்கப் பெற்ற பாலை மரச்சோலையின் நாப்பண் வெளிவட்ட வீதியில் கோயில் கொண்டெழுந்தருளி, வழிபடும் அடியார்களின் இன்னல் நீக்கி, அருள்பாலிக்கிறார் ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமான்.

தற்பொழுது எழுந்தருளியிருக்கும் கோயில் வாசலுக்கு முன்புறமாக ஓங்கி வளர்ந்து நின்ற ஒரு பாலை மரத்தடியிலேயே எம்பெருமான் சிந்தாமணியான் ஆதி மூர்த்தியாக எழுந்தருளப் பெற்று தம்மை வந்து வழிபடும் அடியார்க்கும், வழிப்பயணம் செய்யும் போது தரிசித்துச் செல்லும் அடியார்க்கும் இன்னருள் பாலித்து வருவதை உணர்ந்த அடியார்கள் இறையருள் கூட்ட ஒரு சிறந்த ஆலயம் அமைக்க வேண்டுமென்பதை உணர்ந்தனர். இதன் பொருட்டாக அப்பொழுது வவுனியா கச்சேரியில் கடமையாற்றிய திரு. செ. கணேஷ் அவர்களின் தலைமையில| 11.02.1967ம் ஆண்டு ஒரு பரிபாலனசபை அமையப்பெற்றது. இச்சபையின் செயற்பாட்டுத் திறமையால் 1968 ம் ஆண்டின் சுபவேளை யொன்றில் தற்போதைய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது. தொடர்ந்து 1970ம் ஆண்டளவில் கர்ப்பக்கிரக மண்டபமும் அர்த்த மண்டபமும் பூர்த்தி செய்யப்பட்டு அதே ஆண்டு டிசம்பர் 4ம் திகதி கார்த்திகை மாத அவிட்ட நட்சத்திர சுப முகூர்த்தத்தில் சிவஸ்ரீ விசுவநாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் எம்பெருமானின் குடமுழுக்கு விழா இடம்பெற்றது. அன்று நடைபெற்ற கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சிவஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள் மகன் கந்தசாமிக் குருக்கள் குடும்பத்தினரால் காலை, மாலை, ஆகிய இருகால நித்திய பூசைகள் நடாத்தப்பட்டு வந்தன. 1977ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகத் தடைப்பட்ட அவருடைய நித்திய பூசையைத் தொடர்ந்து சிவஸ்ரீ தர்மலிங்கக் குருக்கள் அவர்கள் ஆலய நித்திய பூசையைப் பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தி வந்தார். தொடர்ந்து 1982ம் ஆண்டு புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம்பெற்றபோது. திரு.த.தியாகலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய நிர்வாக சபையின் ஊக்கமும் ஆக்கமும் சேர்ந்து எம் பெருமான் ஆலயத்திலே மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியது. அதற்கேற்ப 22.04.1984ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் தொடர்ந்து பண்டிகை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 17.03.1986 பங்குனித் திங்கள் ரோகிணி நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில் மட்டுவில் சோதிட சிகாமணி சிவஸ்ரீ சிதம்பரநாதக் குருக்கள் அவர்களின் தலைமையில் எம்பெருமானின் குடமுழுக்கு விழாவாகிய மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது தொடர்ந்து 23 நாட்கள் மண்டலாபிஷேகமும்

> செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
> ஆற்றின் அடங்கப் பெறின். 123
>
> அறிய வேண்டியவற்றை அறிந்து நல்வழியில் அடங்கி நடக்கப் பெற்றால்,
> அவ்வடக்கம் பிறரால் அறியப்பட்டு மேன்மை தரும்.

சகஸ்ர நாம நங்காபிஷேகமும் நடைபெற்றன 1986ம் ஆண்டு நடைபெற்ற நிர்வாகசபைத் தெரிவின் போது திரு. வி. எஸ். தேவகுமாரன் அவர்களின் தலமையில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. புதிய நிர்வாக சபை அங்கத்தவர்களின் செயற்பாட்டினாலும் வழி படும் அடியார்களின் ஒத்துழைப்பினாலும் எம் பெருமான் ஆலயத்திலே சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தைத் தீர்த்தோற்சவதினமாக 10 நாட்கள் கொண்ட மகோற்சவம் நடைபெறத் திருவருள் கூடியது. அதற்கேற்றவகையில் கொடித்தம்பம், தேர், தேர்ச்சகடை, முதலிய வற்றை அமைத்துக் கொடுக்க பல அடியார் களும் வர்த்தக நிறுவனங்களும் முன்வந்தனர் இவற்றுள் தேர் அமைப்புக்கான மூல உபகரணங் களை சரசாலை நுணுவிலைச் சேர்ந்த அருள்மிகு சிதம்பர விநாயகர் ஆலயத்தின் அறங்காவலர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நவக்கிரக மண்டபத்தை திரு. முருகையா குடும்பத்தினர் பொறுப்பேற்று திருப்பணி வேலைகளை நிறைவு செய்தனர். வைரவப் பெருமான் திருப்பணி வேலைகளை அமரர் திரு. புலேந்திரன் அவர்களின் ஞாபகார்த் தமாக அவரது குடும்பத்தினர் நிறைவு செய்தனர். சண்டேஸ்வரர் எழுந்தருளி விக்கிர கத்தை திரு. உருத்திரா அவர்கள் அன்பளிப்புச் செய்தார். 1987ம் ஆண்டு பிரபவ வருடம் சித்திரைத் திங்கள் 22ம் நாள் (04.05.1987) சாவகச்சேரி. சங்கத்தானையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ குமாரஸ்ரீஸ்காந்தக் குருக்கள் அவர்களின் தலைமையில் எம்பெருமானுடைய மகோற்சவம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று ஒன்பதாம் நாள் எம் பெருமானின் சிறப்புமிக்க ரதோற்சவம் அடியார்கள் மனங்களிக்கும் வண்ணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. அதனைத் தரிசித்த ஒரு பக்தர்.

பார் எங்கும் புகழ்பரப்பி ஒளி விளங்க என்றும்
சீர்மல்கும் சிந்தாமணி விநாயகனை நாமின்று
பேர் சொல்லித் துதித்து நிற்க எம்பெருமான்
தேர் ஏறிவந்தாரே சித்திரைத் திங்கள்தனில்
என்று

தன்மனங்குளிரப் பாடியுள்ளார் என்றால் எம்பெருமான் திருவருளை நினைக்கும் போது மெய்சிலிர்க்கின்றது. ரதோற்சவத்தைத் தொடர்ந்து சித்திரைப் பூரணை தினமாகிய மறுநாள் தீர்த்தோற்சவ வைபவமும் மகேஸ்வர பூசையும் வெகு சிறப்பாக நடைபெறுவதற்கு விநாயகப் பெருமான் திருவருள் பாலித்தருளி னார். அடியார்களின் அயராத முயற்சியினாலும் நிர்வாக சபையினரின் ஊக்கத்தினாலும் இந்த மகோற்சவமானது 1987ம் ஆண்டுமுதல் எதுவித தடையுமின்றி நடைபெற்று வருவது எம் பெருமான் திருவருளேயாகும். முதல் மகோற் சவத்தைத் தொடர்ந்து அடியார்களின் உதவி உற்சாக மேலீட்டினால் எஞ்சிய திருப்பணி வேலைகளும் காலத்துக்குக் காலம் நிறைவேற் றப்பட்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை போற்றத்தக்கது. குறிப்பாக வெளிமண்டபம், வசந்தமண்டபம், தீர்த்தக்கேணி ஆகிய திருப் பணிகள் நிறைவுபெற்று மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்புற்று விளங்கும் ஓர் ஆலய மாகத் திகழ்கின்றது. 1990ம் ஆண்டில் நாட்டில் இடம் பெற்ற கலவரம் காரணமாக எம்பெருமான் ஆலயத் திற்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்ட போதும் ஆண்டு தோறும் நடைபெறும் மகோற்சவமானது காலந் தவறாது நடைபெற்று வருகின்றதென்றால் அதுவும் அவன் திருவருளே. அதற்கேற்ற வகையில் அடியார்கள் மனமுவந்து நிதியுதவி யையும் பொருள் உதவியையும் தாரளமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.


சிறப்பாக எம்பெருமான் ஆலயத்திலே வள்ளி

If a man, knowing that self - control is knowledge, in the appointed way control himself such self - control, known by the wise, will bring distintion.
123

தேவ சேனா சமேத சிவசுப்பிரமணியம் பெருமான் பரிவார மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இத்திருப்பணியை அமரர் டாக்டர் சந்திரசேகரம் அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது பிள்ளைகள் நிறைவுசெய்து 1992ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கிடைக்கப்பெற்றது. அன்று முதல் ஸ்கந்தசஷ்டி விரத அடியார்களின் விரத அனுட்டானங்கட்கு ஏற்ற வகையாக அபிடேகம், பூசை, கந்தபுராண பாராயணம், மகேஸ்வரபூசை ஆகிய சமயக் கிரியைகள் முறையாக நடைபெற்று வருவதும் எம்பெருமான் திருவருளே.

அடியார்களின் வேண்டுகோளிளுக்கிணங்க விநாயகப் பெருமானுக்கு சிறந்த சித்திரத்தேர் அமைப்பதற்கு ஆலய பரிபாலன சபையினர் எடுத்த முயற்சியின் பயனாக எம்பெருமானின் புதிய சித்திரத்தேர் அச்சேற்று வைபவம் 1999ம் ஆண்டு தைப்பூச நன்னாளிலே இடம்பெற்று அவ்வருடம் ஆவணிமாத விநாயகர் சதுர்த்தித் தின நன்னாளில் மேற்படி தேரின் பவளக்கால் நாட்டுவைபவமும் இனிது நிறைவேற எம் பெருமான் திருவருள் கிடைக்கப்பெற்றது. ஸ்தபதி சிற்ப கலாரத்தினம் கலாமோகன் குழுவினரின் கை வண்ணத்தாலும் அடியவர்கள் வாரி வழங்கிய திருப்பணி நிதியினாலும் எம்பெருமானுடைய சித்திரத்தேர் இனிதே நிறைவெய்தி 29.04.2001 அன்று சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா கோலாகலமாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து இவ்வாண்டு நடைபெறும் மகோற்சவத்தில் எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனிவந்து அடியார்கட்கு அருள்பாலிப்பார் என்பதை பெருமகிழ்ச்சியோடு அறியத்தருவதுடன் இவையெல்லாம் எவ்வித இடையூறுமின்றி நிறைவேற எம்பெருமான் திருவருளைப் பிரார்க்கிக்கின்றேன்.

"வாழ்க சீர் அடியார் எல்லாம்"



More lofty than a mountain will be the greatness of that man who, without swerving from his proper state, controls himself. 124

## சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயச் சித்திரத் தேர் வெள்ளோட்டம் 29.04.2001 இல் நடக்க இருப்பதனை முன்னிட்டுப் பாடப்பட்ட கீர்த்தனம்

இராகம் :- ஹம்சத்வனி தாளம் :- ஆதி

சித்திரைத் திங்களிலே சித்திரத்தேர் வெள்ளோட்டம்
பக்தர்களே வந்து பார்த்திடுவீர் கண்குளிர
சித்திரைத்....

**அனுபல்லவி**

சிந்தாமணிப் பிள்ளையார் தரிசனமும் கிடைத்துவிடும்
முந்தை வினைதீர்த்து முன்னவனே அருள்புரிவான்
சித்திரைத்....

**சரணம்**

காலகாலமாகக் காத்திருந்த கருமமிது
கோலா கலமாக வெள்ளோட்டம் நடந்திடுமே
வேலாயுதன் அண்ணனுமே விரும்பிப் பவனிகொள்ளச்
சாலவே பக்தர்களும் தேரதனைச் செய்தனரே
சித்திரைத்.....

- ஞானக்கவிமணி

## சைவ சமயமும் சேவையும். . . . . . . . . (12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யோசிப்பதில்லை. பழையகாலத்தில் எவ்விதம் சமயப்பிரசாரம் செய்தார்களென்று படித்தார் களோ அவ்வாறு பிரசாரம் செய்வதுதான் பயன்படும் என்று எண்ணுகின்றனர். உலகம் நாளொருமேனியும் பொழுதொருவண்ண முமாக வளர்ந்து செல்கின்றது. தினந்தோறும் புதியபுதிய முறைகள் கையாளப படுகின்றன. இந்நிலையில் பழைய முறையைத்தான் அநுஷ் டிக்க வேண்டுமென்பது அறிவுடை மையாகாது. பிரசங்கங்களில் சமய உண்மைகளை நன்கு எடுத்துக் கூறல் வேண்டும். ஆனால் இப்பொழு துள்ள சமயப்பிரசாரகர்கள் அவ்வாறு செய்வதில்லை. "சைவத்தின் மேற்சமயம் வேறில்லை" என்ற பாட்டைப்படித்து அதற்கு வியாக்கி யானமும் செய்கிறார்கள். "உங்கள் சமயத்தில் என்ன உண்மைகள் இருக்கின்றன"? என்று ஒருவன் கேட்பானாயின் அதற்குச் சரியான விடையளிக்கும் ஆற்றலைப்பல பிரசாரகர்கள் பெற்றிருக்கவில்லை. அதற்குப் பிரதியாக வசவு கொடுக்க ஆரம்பித்து விடுகின்றனர். இத்தகையோரால் சமயம் ஒருபோதும் வளரப் போவதில்லை. சைவசமயப் பிரசாரகர்கள் ஏழைகள் குடிலை நண்ணி அவர்களுக்குச் சமயப் போதனை செய்வதேகிடையாது. நகரங்களில் சென்று சபைகளில் பிரசங்கம் செய்துவிட்டு "நாங்களும் சமயப்பிரசங்கம் செய்துவிட்டோம்" என்று பெருமை பேசிக் கொள்வதில பிரயோசனம் ஒன்றுமில்லை

சமய உண்மைகளைக் கூறும் நூல்கள் வசன நடையில் பெரிதும் தோன்றவேண்டும். அந் நூல்கள் கலாசாலையில் பாடப்புத்தகங்களாக வைக்கப்பெறல் வேண்டும். பிரசாரகர்கள் சாதிபேதம் கருதாது எல்லா வீடுகளுக்கும் சென்று சமய போதனை செய்தல் வேண்டும். கேட்கும் கேள்விகளுக்குச் சரியான விடை யளிக்கும் ஆற்றல் வாய்ந்தோரே சமயப் பிரசாரகர்களாயிருத்தல் வேண்டும். பொறுமை யில்லாதவர்கள் பிரசாரகர்களாயிருப்பது நன்மையாகாது. ஊர்கள் தோறும் சமய போதனைக் கலாசாலைகள் ஏற்படல் வேண்டும். அங்கு சாதி பேதமின்றி எல்லாப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ள வசதியியிருத்தல் வேண்டும். சமயப்பிரசாரம் செய்வதற்கு ஏற்ற இடங்கள் ஏழை வீடுகளே என்பதை உணரவேண்டும்.

நமது சமயத்தினரின் தொகை குறைந்து கொண்டே வருகிறது, கிறிஸ்து சமயத்தினரின் தொகையோ பெருகிக் கொண்டே போகிறது. கடந்த பத்தாண்டுக்குள் தென்னாபிரிக் காவில் 12,000 பேர்கள் கிறிஸ்து மதத்தில் சேர்ந்திருக்கிறார்கள். நமது சமயம் தாழ்வுறு வதற்குப் பல வகையான ஒவ்வாத காரியங்கள் செய்யப்படுகின்றன. அன்பர்களே! இன்னும் இவ்விதமே இருப்போமானால் நமது சமயம் உண்மையில் அழிந்து கொண்டு செல்லு மென்பதில் ஐயமில்லை. எனவே ஒவ்வொருவரும் சைவசமயத்தை வளர்ப்பதற்கு உண்மையாகப் பாடுபடுங்கள். தீண்டாமை முதலிய வேண்டாத செயல்களை அறவே ஒழியுங்கள்! கிராமங் களுக்குச் சென்று சம

ஏழைகள் வீடு தோறும் சென்று சைவ சமயத்தின் பெருமையினை எடுத்துக் கூறுங்கள்!

ஆத்மஜோதி துன்முகி வருடம்

கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 130

கற்றறிந்து, சினம் வராமல் காத்து, அடங்கி நடக்க வல்லவனின் செவ்வியை, அவனை யடையும் வழியில் சென்று அறக்கடவுள் பார்த்திருக்கும்.

# சைவசமயமும் சேவையும்

– திரு. ச. மு. பிள்ளை அவர்கள்

ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் சமயம் உலகெங்கணு ம் பரவியிருத்தல் வேண்டுமென எண்ணுகின்றனர். இம்மை வாழ்வில் இன்பத் தையும், மறுமைவாழ்வில் சுவர்க்கத்தையும் அளிப்பது தங்கள் சமயந்தான் என்று ஒவ்வொரு வரும் கூறுகின்றனர். தங்கள் சமயம் உல கெங்கும் பரவுதற்கு வேண்டிய வேலைகளை நாடோறும் செய்து கொண்டு வருகின்றனர். அங்ஙனமே நமது சைவசமயத்தினரும் சைவ சமயமானது பூவுலகெங்கும் பரவுதல் வேண்டு மென்றும் சைவசமயந்தான் உண்மையில் மக்களுக்கு இம்மை மறுமை இரண்டினும் நல்வாழ்வளிப்பதென்றும் கூறுகின்றனர். சைவ சமயத்தை வளாப்பதற்கு ஆங்காங்கு சிற்சில கழகங்களும் கண்டிருக் கின்றனர். ஆனால் இன்றிருக்கும் சைவசமய வளர்ப்புக்கழகங்கள் பல உண்மையில் சைவ சமயத்தை வளர்ப்பன வாயில்லை. பழம்பெருமை பேசுவதையே தங்கடனாகக் கொண்டிருக் கின்றன. பழம் பெருமை பேசுவதால் மட்டும் எச்சமயமும் வளர முடியாதென்பதை ஒருவரும் மறந்துவிடக் கூடாது.

இன்று உலகிலே முதன்மைபெற முயற்சித்து வரும் கிறிஸ்து சமயத்தினர் எவ்வாறு தங்கள் பிரசாரத்தை நடத்துகின்றனர் என்பதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்த்தல் வேண்டும். அன்னாரும் த[illegible]ங்கள் சமயத்தின் முதல் வராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பழம் பெருமைகளையெல்லாம் கூறுகின்றாரெனினும், தற்காலவாழ்விற் கேற்பத் தங்கள் பிரசாரத்தை நடத்துகின்றனர். ஊர்கள் தோறும் பல கல்வி நிலையங்களும் வைத்தியசாலைகளும், கைத் தொழிற் சாலைகளும் நிறுவி அவற்றின் மூலம் தங்கள் சமயத்தை வளர்க்கின்றனர். ஒருவரிரு வராகக் கிராமந் தோறும் சென்று, ஏழை மக்கள் இல்லங்களை நாடி அவர்களைத் தங்கள் சமயத்தில் சேர்க்கின்றனர். சாதிபேதமின்றி அனைவரையும் ஒன்றெனக்கருதி கோயில் கடவுள் செல்ல அனுமதிக்கின்றனர். ஏழை களுக்கு, உணவிற்கும் உடைக்கும் சிறிது பொருளும் கொடுக்கின்றனர். ஆடம்பரமின்றித் தங்கள் சமயத்தை மூலை முடுக்குகளிலும் பரவச் செய்துவிட்டனர். இன்னும் தங்கள் சமயம் யாண்டும் பரவுதற்கு வேண்டிய வேலைகளைச் செய்து வருகின்றனர்.

நமது சைவசமய வளர்ப்புக் கழகங்களின் நிலையையுன்னுகின்ற பொழுது மனத்திற்கு வருத்தமே உண்டாகின்றது. அக்கழகங் களிலுள்ள பணியாளர்கள் இருக்கவில்லை. எவ்வழியில் பணியாற்றுதல் வேண்டுமென்று

எவன் மொனம் சாதிக்கிறானோ, எவன் அதிகம் பேசாமல் பொறுமையுடன் இருக்கின்றானோ, எவன் தன்னிடம் அதிக நியாயமிருந்தும் பிறரைக் கொண்டு பேசச் செய்யவில்லையோ, எவன் தனக்குக் கெடுதல் செய்தவனை கொல்ல விரும்பவில்லையோ எவன் தன்னிடம் பணம் இல்லாத சமயத்திலும் பிறரிடம் வாங்கி கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வானோ அவனை தேவாதி தேவர்கள் ஆயுள் முடிந்த உடன் புண்ய லோகத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள்.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 125

செருக்கின்றிப் பணிவுடையராக நடத்தல், பொதுவாக எல்லார்க்கும் நல்லதாகும். ஆயினும் அவவெல்லாருள்ளும் சிறப்பாக, செல்வம் உடையவர்க்கே அது வேறோரு செல்வம் போன்ற தன்மை உடையதாகும்.

சைவ வினாவிடை

# சிவாலயகைங்கரியவியல்

- ஆறுமுகநாவலர்

(1) சிவாலயத்தின் பொருட்டுச் செயற்பாலன வாகிய திருத்தொண்டுகள் யாவை?
திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தன வனம் அமைத்தல், பத்திரபுஷ்ப மெடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்த தூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், பூசைத் திரவியங்கள் கொடுத்தல் என்பவை களாம்

## திருவலகிடுதல்

(2) திருவலகு எப்படி இடுதல் வேண்டும் ?
சூரியன் உதிக்கும் முன் ஸ்நானஞ் செய்து, சந்தியாவந்தனம் முடித்துக்கொண்டு, திருக்கோயிலினுள்ளே புகுந்து, மெல்லிய துடைப்பத்தினாலே கிருமிகள் சாவாமல் மேற்பட அலகிட்டுக் குப்பையை வாரித், தூரத்தே கொண்டுபோய்க், குழியிலே கொட்டிவிடல் வேண்டும்.

(3) திருமெழுக்கு எப்படிச் சாத்துதல் வேண்டும்?
ஈன்றண்ணியதும் நோயையுடையதும் அல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழு முன், இலையில் ஏந்தியாயினும், ஏந்தல் கூடாத போது சுத்த நிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்து வந்த சலத்துடனே கூட்டிச் செங்கற் படுத்த நிலத்தையும், மண்படுத்த நிலத்தையும் மெழுகல் வேண்டும். கருங்கற் படுத்த நிலத்தைச் சலத்தினாலே கழுவி விடல் வேண்டும்; கருங்கல்லிலே சாணி படலாகாது.

## திருநந்தவனம் வைத்தல்

(4) திருநந்தனவனம் வைக்கற்பாலதாகிய தானம் யாது?
சண்டாளபூமிக்குஞ் சுடுகாட்டுக்கும் மலசல மோசன பூமிக்குஞ் சமீபத்தினல்லாததாய், நான்கு பக்கத்துஞ் சுவரினாலேனும் வேலியினாலேனுஞ் சூழப்பட்டதாய்க், கீழே ஆழமாக வெட்டி எலும்பு முதலிய குற்றங்கள் அறப் பரிசோதிக்கப்படடதாய்ப், பசு நிரை கட்டப் பெற்றுக் கோசல கோமயத்தினாலே சுத்தியடைந்த தாய் உள்ள நிலமேயாம்.

(5) இப்படிப் பட்ட நிலத்தில் வைக்கற்பாலனவாகிய மரஞ் செடி கொடிகள் எவை?
*மரங்கள்:* வில்வம், பாதிரி, கோங்கு, பன்னீர், கொன்றை, புலிநகக்கொன்றை, பொன்னா விரை, மந்தாரை, சண்பகம், குரா, குருந்து, மகிழ், புன்னை, சுரபுன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலிங்கை, நுணா, விளா, முக்கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, எலுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை, வாழை, செவ்விளநீர், சூரிய கேளியிளநீர், சந்திரகேளியிளநீர் என்பவை களாம். மரங்களில் உண்டாகும் பூக் கோட்டுப் பூ எனப்படும்.
*செடிகள்:* அலரி, நந்தியாவர்த்தம், குட மல்லிகை, வெள்ளெருக்கு செம்பரத்தை, கொக்கிறகு, மந்தாரை, துளசி, நொச்சி, செங்கீரை, பட்டி, நாயுருவி, கருவூமத்தை, பொன்னூமத்தை, கத்தரி, தகரை, செவ்வந்தி தும்பை, வெட்டிவேர், இலாமச்சை, தருப்பை, மருக்கொழுந்து, சிவகரந்தை, விஷ்னு

Humility is good in all, but especially in the rich it is (the excellence) of higher riches. 125

காந்தி, மாசிப்பச்சை திருநீற்றுப்பச்சை, பொற்றலைக் கையாந்தகரை, எள்ளு, பூளை, அறுகு என்பவைகளாம். செடிகளில் உண்டாகும் பூ நிலப்பூ எனப்படும்.

*கொடிகள்:* மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக் கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை என்பவைகளாம். கொடிகளில் உண்டாகும் பூக் கொடிப்பூ எனப்படும்.

**(6) நீர்ப்பூக்கள் எவை ?**

செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற் பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பவைகளாம்.

**(7) திருவநந்தனவனத்தை எப்படிப் பாதுகாத்தல் வேண்டும் ?**

புலையர், புறச்சமயிகள், தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளே புகாமலும், யாவராயினும் எச்சில், மூக்கு நீர் மலசல முதலியவைகளால் அசுசிப் படுத்தாமலும், அங்குள்ள பத்திர புஷ்பங்களைக் கடவுட் பூசை முதலியவற்றிற் கன்றிப் பிறவற்றிற்கு உபயோகப்படுத்தாமலும், மோவாமலும், அங்குள்ள மரஞ் செடி கொடிகளிலே சலந் தெறிக்கும்படி வஸ்திரந் தோயாமலும், அவைகளிலே வஸ்திரத்தைப் போடாமலும் பாதுகாத்தல் வேண்டும்.

## பத்திர புஷ்பம் எடுத்தல்

**(8) கடவுட் பூசைக்குப் பத்திர புஷ்பங்கள் எடுக்க யோக்கியர் யாவர்?**

நான்கு வருணத்துட்பட்டவராய்ச், சிவ தீக்ஷை பெற்றவராய், நியமாசாரமு டையவராய் உள்ளவர்.

**(9) பத்திர புஷ்பம் எடுக்க யோக்கியர் ஆகாதவர் யாவர்?**

தாழ்ந்த சாதியார், அதீக்ஷதர், ஆசௌச முடையவர், நித்தியகருமம் விடுத்தவர், ஸ்நானஞ் செய்யாதவர், தூர்த்தர் முதலானவர்.

**(10) கடவுட் பூசைக்கு ஆகாத பூக்கள் எவை?**

எடுத்துவைத் தலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம் பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், இரவில் எடுத்த பூவும், கைச் சீலை, எருக்கிலை, ஆமணக்கிலை என்பவற்றிற் கொண்டு வந்த பூவும், காற்றினடிபட்ட பூவும், புழுக்கடி எச்சம் சிலந்தி நூல் மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், மோந்த பூவுமாம். திருக்கோயிலுள்ளும் அதன் சமீ பத்தினும் உண்டாகிய பத்திர புஷ்பங்கள் ஆன்மார்த்த பூசைக்கு ஆகாவாம்.

**(11) இன்ன இன்ன தேவருக்கு இன்ன இன்ன பத்திர புஷ்பம் ஆகா என்னும் நியமம் உண்டா?**

ஆம்; விநாயகருக்குத் துளசியும், சிவபெருமா னுக்குத் தாழம்பூவும், உமாதேவியாருக்கு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியா வர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமண ருக்குத் தும்பையும் ஆகாவாம்.

**(12) வில்வம் எடுக்கலாகாத காலங்கள் எவை?**

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, மாசப் பிறப்பு என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே வில்வம் எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

**(13) துளசியெடுக்கலாகாத காலங்கள் எவை?**

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை வெள்ளிக்கிழமை, திருவோண நக்ஷத்திரம், சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே துளசி எடுத்து வைத்துக் கொள்ளல் வேண்டும் இரண்டிலை கீழே உள்ள துளசிக்கதிர் எப்போதும் எடுக்கலாம்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. 126

ஒரு பிறப்பில் ஆமைபோல் ஒருவன் ஐம்பொறிகளையும் அடக்க வல்லவனானால், அவ்வல்லமை அவனுக்கு ஏழு பிறப்பளவும் பாதுகாப்பாகும் சிறப்புடையது.

(14) இன்ன இன்ன பத்திர புட்பம் இவ்வளவு இவ்வளவு காலதத்க்கு வைத்துச் சாத்த லாம் என்னும் நியமம் உண்டோ?
ஆம்; வில்வம் ஆறு மாசத்திற்கும், வெண்டுளசி ஒரு வருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்கும், அலரிப் பூ மூன்று நாளிற்கும் வைத்துச் சாத்தலாம்.

(15) பத்திர புஷ்பம் எப்படி எடுத்தல் வேண்டும்?
சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச் சந்தியாவந்தனம் முடித்து, இரண்டு கைகளையுங் கழுவித், திருப்பூங்கூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி உயரப் பிடித்துக்கொண்டாயினும், அரைக்கு மேலே கையிலே பிடித்துக்கொண்டாயினும், திருநந் தனவனத்திற் போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திர புஷ்ப மெடுத்து, அவைகளைப் பத்திரத்தினாலே மூடிக் கொண்டு, திரும்பி வந்து, கால்களைக் கழுவிக் கொண்டு, உள்ளே புகுந்து, திருப்பூங் கூடையைத் துாக்கிவிடல் வேண்டும்.

(16) பத்திர புஷ்பம் எடுக்கும் போது செய்யத் தகாத குற்றங்கள் எவை?
பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளிலேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தல், கொம்புகள் கிளைகளை முறித்தல், கைகளை அரையின் கீழே தொங்கவிடுதல் கைகளினாலே உடம்பையேனும் வஸ்திரத் தையேனும் தீண்டுதல் என்பவைகளாம்.

### திருமாலை கட்டுதல்

(17) திருமாலை எப்படிக் கட்டல் வேண்டும்?
திருமாலைக் குறட்டைச் சலத்தினாலே அலம்பி இடம் பண்ணித், திருப்பூங் கூடையிலுள்ள பத்திர புஷ்பங்களை எடுத்து அதில் வைத்துக் கொண்டு, மௌனியா யிருந்து, சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவைகளை அகற்றிவிட்டு, இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலிய பல வகைப்பட்ட திருமாலைகளைக் கட்டல் வேண்டும்.

### சுகந்த தூபம்மிடுதல்

(18) சுகந்த தூபம் எப்படி இடுதல் வேண்டும்?
வாசனைத் திரவியங்கள் கலந்து இடிக் கப்பட்ட சாம்பிராணி கொண்டு சுகந்த தூபமிடல் வேண்டும்.

### திருவிளக்கேற்றல்

(19) திருவிளக்குக்கு என்ன நெய் கொள்ளத் தக்கது?
திருவிளக்குக்குக் கபிலைநெய் உத்தம த்தின் உத்தமம்; மற்றைப் பசுநெய் உத்தம த்தின் மத்திமம், ஆட்டு நெய் எருமை நெய் உத்தமத்தின் அதமம்; வெள்ளெள்ளினெய் மத்திமத்தின் உத்தமம்; மற்றையெள்ளி னெய் மத்திமத்தின் மத்திமம்; மரக் கொட்டைகளினெய் அதமத்தின் அதமம். (கபிலை = கபில நிறமுடைய பசு; கபில நிறம் = கருமை சேர்ந்த பொன்னிறம்)

(20) திருவிளக்கு திரி என்ன நூல் கொண்டு எப்படிப் பண்ணல் வேண்டும்?
தாமரை நூல் வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல் என்பவைகளுள் இருபத்தோரிழையா லேனும் பதினாறிழையாலேனும் பதினான் கிழையாலேனும் ஏழிழையாலேனுங் கர்ப் பூரப்பொடி கூட்டித் திரி பண்ணல் வேண்டும்.

(21) மாவிளக்கு எப்படி இடுதல் வேண்டும்?
பகலிலே போசனஞ் செய்யாத, சனிப் பிரதோஷத்திலுஞ் சிவராத்திரியிலுஞ் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணிக் கபிலநெய் மூன்று நாழியேனும் ஒன்றரை நாழியேனும் முக்கானாழியேனும் வார்த்துக் கைப்பருவிரற் பருமையுடைய வெண்டாமரை நூற்றிரியிட்டுத் திருவிளக் கேற்றல் வேண்டும்.

He who throughout one birth like a tortoise in his five senses will obtain happiness throghoutthe seven births. 126

### தோத்திரம் பாடல்

**(22) எந்தத் தோத்திரங்களை எப்படிப் பாடல் வேண்டும்?**

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்னும் அருட்பாக்களை மனங் கசிந்துருகக், கண்ணீர் வார, உரோமஞ் சிலிர்ப்பப், பண்ணோடு பாடல் வேண்டும்.

### ஆனந்தக்கூத்தாடல்

**(23) ஆனந்தக்கூத்து எப்படி ஆடல் வேண்டும்?**

உலகத்தார் நகைக்கினும் அதனைப் பாராது, நெஞ்சம் நெக்குருகக், கண்ணீர் பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்பக், கைகளைக் கொட்டித், தோத்திரங்களைப் பாடிக், கால்களை சதிபெற வைத்து, ஆனந்தக் கூத்தாடல் வேண்டும்.

### பூசைத் திரவியங்கள்

**(24) திருமஞ்சனத்திலே போடற்பாலனவாகிய திரவியங்கள் எவை?**

பாதிரிப்பூ, தாமரைப்பூ, முதலிய சுகந்த புஷ்பங்களும் செங்கழுநீர்க் கோஷ்டம், ஏலம், இலாமச்சம்வேர், வெட்டிவேர், இலவங் கப்பட்டை, சந்தனம், கர்ப்பூரம் என்னும் பரிமளத் திரவியங்களுமாம்.

**(25) பாத்தியத் திரவியங்கள் எவை?**

வெண்கடுகு, இலாமச்சம்வேர், சந்தனம், அறுகு என்னும் நான்குமாம்.

**(26) ஆசமநீயத் திரவியங்கள் எவை?**

சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகப் பூ மொட்டு, பச்சைக்கர்ப்பூரம் என்னும் ஆறுமாம்.

**(27) அருக்கியத் திரவியங்கள் எவை?**

சலம், பால், தரப்பைநுனி, அக்ஷதை, எள், யவம், சம்பாநெல், வெண்கடுகு என்னும் எட்டுமாம்.

**(29) அபிஷேகத் திரவியங்கள் எவை?**

எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக் காப்பு, மஞ்சட் காப்பு, பஞ்சகவ்வியம், ரசபஞ்சாமிர்தம், பல பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நாரத்தம் பழச்சாறு, தாமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப்பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, இளநீர், சந்தனக் குழம்பு என்பவைகளாம். தாமிர பாத்திரத்தில் விட்ட பாலும், வெண்கலப் பாத்திரத்தில் விட்ட இளநீருங் கள்ளுக்குச் சமம். இளநீர் முகிழைத் திறந்து, தனித்தனி அபிஷேகம் பண்ணல் வேண்டும். நெய்யபிஷேகம் செய்தவுடன் இளவெந்நீரபிஷேகம் செய்தல் வேண்டும். இளநீரபிஷேகத்துக்குப் பின் எண்பத்தொரு பதமந்திரம் உச்சரித்துச் சகச்சிரதாரை கொண்டு சுத்தோதகத்தால் அபிஷேகஞ் செய்தல் வேண்டும் சந்தனக் குழம்புக்குப் பின் விதிப்படி தாபிக்கப்பட்ட நவ கலசத்தினாலும் விசேஷார்க்கியத் தினாலும் அபிஷேகம் செய்தல் வேண்டும்.

**(30) அபிஷேகத்தின் பொருட்டு எண்ணெய் எப்படி ஆட்டல் வேண்டும்?**

எள்ளை வண்டு முதலிய பழுதறப் பதினாறுதரம் பார்த்து ஆராய்ந்து, உவர் முதலிய தீய சலங்கள் விடாது நல்ல சலத்தைப் புதிய பாண்டத்தில் விட்டு, எள்ளைக் கருந்தோல் போமளவுங் காலினால் மிதியாது கையினாற் பிசைந்து கழுவி, காகம் கோழி நாய் பன்றி முதலியன வாயிடல் மிதித்தல் செய்யா வண்ணம் உலர்த்தி, கல்லினாலேனும் புளியமரத்தி னாலேனுஞ் செய்த, நாய் முதலியன வாயிடாத, கைச்செக்கினால் ஆட்டல் வேண்டும். சந்தனாதிதைலம் முதலிய சுகந்தத் தைலஞ் செய்து அபிஷேகம் பண்ணுவித்தல் உத்த மோத்தமம். தம் வியாதி நீக்கத்தின் பொருட்டுச் சந்தனாதிதைல முதலிய செய்வித்தவர் முதற்கட் சிறிது பாகஞ் சிவலிங்கப் பெருமா னுக்கு அபிஷேகம் பண்ணுவிக்கக் கடவர்.

**(31) பஞ்சகவ்விய மென்பது என்ன?**

விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர்,

> யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. 127
>
> மக்கள் வேறு எவற்றைக் காக்கா விட்டாலும், நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறி னால் சொற் குற்றப்பட்டுத் துன்புறுவர்.

நெய், கோசலம், கோமயம் என்பவை களினது தொகுதியாம்; இது பிரமகூர்ச்சம் எனவும் பெயர் பெறும். பால் ஐந்து பலமும், தயிர் மூன்று பலமும், நெய் இரண்டு பலமும், கோசலம் ஒரு பலமும், கோமயங் கைப்பெருவிரலிற் பாதியுங் கொள்க.

**(32) ரசபஞ்சாமிர்த மென்பது என்ன?**
விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, என்பவைகளினது, தொகுதியாம்.

**(33) பலபஞ்சாமிர்தம் என்பது என்ன?**
முற்கூறிய ரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டி அமைக்கப்பட்ட வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பவைகளினது தொகுதியாம்.

**(34) கவ்வியகத்துக்கு உரிய பசுக்கள் எவை?**
வியாதிப் பசு, கிழப் பசு, கன்று செத்த பசு, கன்று போட்டுப் பத்து நாட் சூதகடைய பசு, கிடாரிக்கன்றாகிய பசு, சினைப் பசு, மலட்டுப் பசு, மலத்தைத் தின்னும் பசு, என்னும் எண் வகைப் பசுக்களல்லாத மற்றைப் பசுக்களாம். பால் கறக்குமிடத்துப் பாத்திரத் தையுங் கைகளையுங் கன்றூட்டிய முலை யையுஞ் சலத்தினாற் கழுவிக்கொண்டே கறத்தல் வேண்டும். கறந்தபின் பாலைப் பரிவட்டத்தினால் வடித்துக் கொள்ளல் வேண்டும்.

**(35) சந்தனக்குழம்போடு சேரற்பாலனவாகிய திரவியங்கள் எவை?**
குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக் கர்ப்பூரம், புழுகு, சவ்வாது, கஸ்தூரி என்பவைகளாம்.

**(36) நைவேத்தியங்கள் எவை?**
சுத்தான்னம், சித்திரான்ன வகைகள், நெய், காய்ச்சிய பால், தயிர், முப்பழம், தேங்காய்க்கீறு, சர்க்கரை, கறியமுதுகள், அபூப வகைகள், பாணகம், பானீயம், வெற்றிலை பாக்கு, முகவாசம் என்பவை களாம். (அபூபம் = பணிகாரம்)

**(37) சித்திரான்ன வகைகள் எவை?**
பருப்புப் பொங்கல், சர்க்கரைப் பொங்கல், மிளகோதனம், புளியோதனம், ததி யோதனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந் தோதனம், பாயசம் என்பவைகளாம்.

**(38) பணிகார வகைகள் எவை?**
மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல், அதிரசம், தோசை, இட்டலி என்பவைகளாம்.

**(39) பாணீயம் என்பது என்ன?**
ஏலம், சந்தனம், பச்சைக்கர்ப்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ, என்பவைகள் இடப்பெற்ற சலம்.

**(40) முகவாசம் என்பது என்ன?**
ஏலம், இலவங்கம், பச்சைக்கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றின் பொடியைப் பனிநீரோடு கூட்டிச் செய்த குழிகை.

**(41) மேலே சொல்லப்பட்டவைகளன்றிச் சிவால யப்பணிகள் இன்னும் உள்ளனவா ?**
உள்ளன; அவை, திருவீதியில் உள்ள புல்லைச் செதுக்குதல், திருக்கோபுரத்திலுந் திருமதில்களிலும் உண்டாகும் ஆல் அரசு முதலியவற்றை வேரோடுகளைதல், திருக் கோயிலையும் திருக்குளத்தையும் திரு வீதியையும் எச்சில் மலசலம் முதலிய வைளினால் அசுசியடையா வண்ணம் பாதுகாத்தல், திருக்கோயிலினுள்ளே புகத்தாகத இழிந்த சாதியாரும், புறச் சமயிகளும், ஆசாரம் இல்லாதவரும், வாயிலே வெற்றிலை பாக்கு உடையவரும் சட்டையிட்டுக் கொண்டவரும், போர்த்துக் கொண்டவரும், தலையிலே வேட்டி கட்டிக் கொண்டவரும் உட்புகாவண்ணம் தடுத்தல், திருவிழாக் காலத்தில் திருவீதி யெங்குந் திருவலகிட்டுச் சலந் தெளித்தல், வாகனந் தாங்கல், சாமரம் வீசுதல், குடை கொடி ஆலவட்டம் பிடித்தல் முதலியவைகளாம்.

Though you guard nothing else, guard your tongue, as for those who do not guard it, their words will be drawn into evil and they will suffer distress. 127

# சித்திரை ஆதிரைநாள்

- மட்டுவில் ஆ. நடராசா

சங்க காலத்திற்கும் தேவார முதலிகள் காலத்துக்கும் இடைப்பட்ட காலத்திற் தோன்றியவை ஐம்பெருங்காப்பியங்கள். அவற்றுள் ஒன்று சீவகசிந்தாமணி. அதன் கவர்ச்சி காரணமாக அக்காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பலரும் அதை விரும்பிப் படித்தனர். உரையாசிரியர்கள் சிந்தாமணியிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டினர். இலக்கியரசிகனாகிய அநபாய சோழனும் சிந்தாமணியைப் படித்து அதைப் பாராட்டினான். இவற்றையெல்லாம் அறிந்தார் சேக்கிழார்.

உண்மையானதொரு நூல் அதைக் கற்போரை இம்மையில் நன்னெறியில் ஒழுகச் செய்வதாயும்; மறுமை இன்பத்தைக் கொடுப்பதாயும் இருத்தல் வேண்டும். இன்மை மறுமை இன்பங்களைத் தரும் நூல் சிவகதை. இதற்கு மாறாக, இம்மை மறுமை இன்பங்களைத் தராத நூல் அவகதை. சிவகதைக்கும் அவகதைக்கும் இடைப்பட்ட நிலையிலுள்ள நூல் தவகதை. தவகதை சிவகதை படிக்கத் தூண்டுவதாக அமையலாம். "புவியின ரேனையர் புராணந் தேரினுஞ் சிவகதை யுணர்கில ரென்னிற் நீருமோ அவர் மயல் ?" என்கின்றது கந்தபுராணம்.

இவ்வுண்மையை அறிந்த சேக்கிழார் உள்ளீடற்ற அவகதையாகிய சிந்தாமணியைக் கைவிட்டுச் சிவகதை படிக்க வேண்டுமென வளவனுக்கு அறிவுரை கூறினார். நம்பியாண்டார் நம்பி செய்த திருத்தொண்டர் திருவந்தாதியையும் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையும் அநபாயனுக்கு விரித்துரைத்தார். இச் செய்தியை,

"வளவனுங்குண் டமண்ரட்டுத் திருட்டுச் சிந்தா
மணிக்கதையை மெய்யென்று வரிசை கூர
உளமகிழ்ந்து பலபடப்பா ராட்டிக் கேட்க
உபயகுல மணிவிளக்காஞ் சேக்கி மூர்கண்
டிளவரசன் றனைநோக்கிச் சமணர் பொய்நூல்
இது 'மறுமைக் காகாதிம் மைக்கு மற்றே
வளமருவு கின்றசிவ கதையிம் மைக்கும்
மறுமைக்கும் முறுதியென வளவன் கேட்டு

என்று கூறுகின்றது சேக்கிழார் நாயனார் புராணம்

சேக்கிழார் கூறிய சிவகதையைக் கேட்ட அபயன் திருத்தொண்டர் கதையைப் பெருங் காப்பியமாகச் செய்து தரும்படி கேட்டுத் திரவியமுங் கொடுத்து விடை கொடுக்க அவற்றைப் பெற்ற சேக்கிழார் தில்லை சேர்ந்தார். தில்லை சேர்ந்த சேக்கிழார் தில்லையம்பலவாணரை வணங்கி, "உனது அடியார் சீர் அடியேன் உரைத்திட அடியெடுத்துத் தருவாய்" எனத் திருவருளை எண்ணி இறைஞ்சினார். அப்பொழுது அங்குள்ளோர் எல்லோரும் கேட்கும் படியாக "உலகெலாம்" என அசரீரி வாக்கு அடியெடுத்துக் கொடுத்தது. சேக்கிழார் தேவார முதலிகளை வணங்கி, சிவசாதனம் பூண்டு, தனது நூலை இரண்டு காண்டங்களாகவும் பதின் மூன்று சருக்கங்களாகவும் வகுத்து நாலாயிரத் திருநூற்றைம்பத்து மூன்று பாடல்களாற் பாடி முடித்து இந்நூலுக்குத் திருத்தொண்டர் புராணமெனப் பெயருமிட்டார்.

திருத்தொண்டர் புராணம் பாடியபோது, தன்னைத் திருத்தொண்டர் புராணம் பாடவைத்த அநபாய சோழனை மறக்காத வேளாண் செல்வராகிய சேக்கிழார் அவனுக்குத் தான் பாடிய புராணத்தில் உரிய இடமளித்திருக்கிறார். பெருங்காப்பிய இலக்கணத்துக்கமைவாக திருமலைச் சிறப்புப் பாடத் தொடங்கிய சேக்கிழார், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாய மலையைப் பாடும் போது "கையில் மான் மழுவும் சடையிற் கங்கையும் பிறையும் நறுமணங் கமழும் கொன்றை மாலையுந் தரித்த அளப்பெரும் பெருமையி

ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றுஆகாது ஆகிவிடும். 128

தீய சொற்களின் பொருளால் விளையும் துன்பம் ஒன்றேனும் ஒருவன் பேச்சில் உண்டானால் அவன் ஏற்கனவே செய்துள்ள பிற அறங்கள் பயன்படாமல் போகும்.

னாலும் சிவபெருமான் வீற்றிருக்குந் தன்மை யினாலும் வெண்கொற்றக் குடையும் செங் கோலுமுடைய அபயகுல சேகரனது உள்ளத் தைப் போலத் திருக்கைலாய மலை உயர்ந்து விளங்கு கின்றது." என்று கூறுகின்றார்.

*கையின் மான் மழுவர் கங்கைசூழ் சடையிற்*
*கதிரிளம் பிறைநறுங் கண்ணி*
*ஐயர்வீற் றிருக்குந் தன்மையினாலும்*
*அளப்பரும் பெருமையி னாலும்*
*மெய்யொளி தழைக்குந் தூய்மையி னாலும்*
*வென்றி - வெண் குடையந பாயன்*
*செய்யகோ லபயன் றிருமனத் தோங்குந்*
*திருக்கயி லாயநீள் சிலம்பு*

என்பது அப்பாடல். இவ்வாறு பத்துப் பாடல் களால் அநபாய சோழனைச் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார் சேக்கிழார். கண்ணி – தலை மாலை. சிலம்பு – மலை.

புராணநூல் பாடிமுடிந்ததை அறிந்த அபயன் தில்லைக்குச் சென்றான். அவனைத் தில்லை வாழந்தணரும் மடாதிபதிகளும் சேக்கிழாரும் வரவேற்றனர். திருவேடத்தோடு நின்ற சேக்கிழாரைக் கண்டு மகிழ்ந்த அரசன் தன்னையறியாமலே கைகளை உச்சி மேற் குவித்து அவரது பாதத்தில் விழுந்து வணங்கி னான். அதன்பின் பொன்னம்பலவாணரை வணங்க, அவர் கனகசபையில் வெளிப்பட்டு நிற்பது கண்டு, பரவசமடைந்து பரவினான். அப் பொழுது "வளவனே" நீ இதைக்கேள். சேக்கிழார் நமது தொண்டர் சீர் பரவ "உலகெலாம்" என்று நம் வாக்கினால் அடியெடுத்துக் கொடுத்தோம். அவன் நூல் செய்து முடித்தனன்" என்னுந் திருவாக்குஞ் சிலம்பொலியும் எழுந்தன.

*சேக்கிழானமது தொண்டர்சீர்பரவ நாம்மகிழ்ந்துலக மென்றுநம்*
*வாக்கினாலடி யெடுத்துரைத்திட வரைந்து நூல் செய்து முடித்தனன்*
*காக்கும் வேல்வளவ நீயிதைக்கடிது கேளெனக் கனக வெளியிலே*
*ஊக்கமானதிரு வாக்கெழுந்தது திருச்சிலம்பொலியு முடனெழ*

என்கின்றது சேக்கிழார் புராணம்.

அதன்பின் வீதிகளெல்லாம் அலங்காரஞ் செய்யப்பட்டன. சிற்றம்பலத்தின் முன்புறத்தைக் கோமய சலத்தால் மெழுகி, சுவர்களைச் சுண்ணச் சாந்தாற் பூசி அலங்கரித்து, ஆறுகாற் பீடமமைத்து, அதன்மேற் பட்டு விரித்து அதன் மேல் வெள்ளை மடித்திட்டுப் பூத்தூவித் தூய தீபங்காட்டி, சேக்கிழார் புராணஞ் செய்த திரு முறையை அதன் மேல் வைத்து, வணங்கிப் போற்றி, திருநெறிய தமிழ் வல்லோர், சிவா கமங்கள் கற்றோர், வேத விற்பன்னர், காவியங்கள் வரித்துரைக்க வல்லோர் அனை வரும் "நீரே வாசித்துப் பொருள் கூறுவீராக" எனச் சேக்கிழாரை வேண்ட அவர் தாம் செய்த நூலின் பொருளையும் தம்மாற் பாடப்பட்ட திருத்தொண்டர்கள் செய்த நூல்களின் பொருளையும் கூறத் தொடங்கினார்.

சிவனுடைய பெயர்களுள் ஒன்று ஆதிரை யான் என்பது. அப்பெயரைத் தனது பெயராகக் கொண்ட நாள் ஆதிரைநாள். ஒரு சித்திரை மாசத்து ஆதிரை நாளில் திருத்தொண்டர் புராணத்துக்குப் பொருள் கூறத் தொடங்கிய சேக்கிழார், அதை அடுத்த ஆண்டுச் சித்திரை மாசத்து ஆதிரை நாளில் முடித்தருளினார்.

அரங்கேற்றம் ஆரம்பமான நாள்முதல் அது நிறைவு பெறும் வரை அந்நிகழ்ச்சியிற் கலந்து கொண்டோர் அனைவருக்கும் உணவு, உடை, உறைவிடம் முதலியவற்றை அரசனின் ஆணை ப்படி அமைச்சர்கள் வழங்கினர். நடராசப் பெரு மானுக்கு நாள் தோறும் யாக பூசை நடை பெறவும் தில்லைவாழந்தணருக்குத் தனித்தனி அமுதுபடி, கறியமுது முதலியனவெல்லாம் வழங்கவும் வளவன் ஒழுங்கு செய்தான்.

நிறைவு நாளன்று திருமுறைக்கு மறையோர் சிவமூலமந்திரத்தால் அர்ச்சனை செய்து வணங்கி "இன்று முதல் இது ஐந்தாம் வேத மாகும் " என்றெண்ணி நிவேதித்துச் சோட சோபசார பூசை செய்தனர். அபயன் திருமுறை யைப் பசும் பட்டாடையினாற் சுற்றிப் பொற் கலத்தில் வைத்தபின் அதையும் சேக்கிழார் பெரு மானையும் யானை எருத்தத்தில் ஏற்றி, தானுமதிலேறியிருந்து தன்னிரண்டு கரங்க

The wound which has been burnt in by fire may heal,but a wound burnt in by the tonguewill never heal.

ளாலும் கவரி வீசிக் கொண்டு, மறை முழங்கத் திருவீதி வழியாக வலம் வரும்போது, அரசர் கோமான் தன்னையறியாமலே "இதுவன்றோ நான் செய்த தவப் பயன்" என்று கூறினான்.

வீதிவலமாகச் சிற்றம்பலத்துக்கு முன்பு வந்திறங்கி, அரசனும் சேக்கிழார் பெருமானும் மறையோரும் திருமுறையைக் கொண்டு சென்று இறைவன் திருமுன்வைத்து வணங் கியபின், சேக்கிழாரை மண்டபத்திலிருத்தி அவருக்குத் "தொண்டர்சீர் பரவுவார்" என்னும் சிறப்புத் திருநாமத்தைச் சூட்டி அவரை வளவர் பூபதி வணங்கினான்.

அங்கிருந்த பெருமக்கள் அனைவரும் சேக்கிழார் செய்த புராண நூலைப் பன்னி ரண்டாந் திருமுறையாக அங்கீகரித்து அதைச் செப்பேட்டிற் பொறித்து நடராசப் பெருமானின் சந்நிதியில் வைத்தனர்.

சேக்கிழார் குன்றை நகருக்குச் சென்று அங்கொரு குளத்தை அமைத்தபின் நாகை யிலிருந்த சிவாலயத்துக்குத் திருப்பணி செய்து கொண்டும் தவஞ் செய்து கொண்டுமிருந்து பொன்னம்பல வாணனின் அடியிணைகளை அடைந்தார்.

பின்பு பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந் தவரும் சந்தான குரவரிலொருவரும் சித்தாந்த அட்டகஞ் செய்தவருமான உபாபதி சிவாச் சாரியார். சேக்கிழார் புராணத்தையும் திரிசிர புரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளைய வர்கள் சேக்கிழார் பிள்ளைத் தமிழையும் பாடினர். புராணஞ் செய்த தமக்கு ஒரு புராணம் பாடப்பெற்ற பெருமைக்குரியவர் சேக்கிழார் பெருமான் ஒருவரேயாகும்.

திருத்தொண்டர் புராண அரங்கேற்றம் ஆரம்பமான நாளும் அது பூர்த்தியடைந்த நாளும் சித்திரை மாசத்து ஆதிரை நாளாகும். அதனால் அந்நாள் புனிதமான நாளாகக் கருதப்படு கின்றது. பன்னிரண்டு திருமுறைகளும் படிக் கப்படும் ஆலயங்களில், பன்னிரண்டாந் திருமுறை அரங்கேறிய மாதமான சித்திரை மாதத்தில் திருத்தொண்டர் புராணம் படிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர் சைவச் சான்றோர். இவ்வழக்கத்தைப் பின்பற்றினால் வைகாசி மாதத்தில் முதலாந் திருமுறை படிக்கப் படும். திருமுறைகளை மாதமொரு திருமுறை யாகப் படித்துக் கொண்டு வந்தால் திருவெம் பாவைப் பூசைக்காலமாகிய மார்கழி மாசத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய எட்டாந் திருமுறை படிக்கப்படும். இவ்வாறு திருமுறை படிக்கவேண்டிய காலம் மிகப் பொருத்தமாக வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

திருமுறை முற்றோதலுக்கு ஓராண்டு காலம் ஒதுக்கப்பட்டாலன்றி, அவற்றின் பொருளை ஓரளவுக்காவது உணர்ந்தோதும் வாய்ப்புக் கிடைக்காது. திருத்தொண்டர் புராண அரங் கேற்றத்தின் போது சேக்கிழார், தம்மாற் பாடப் பட்ட திருத்தொண்டர்கள் பாடிய பாடல் களுக்கும் விளக்கமளித்தார் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

சிவகதை செய்த ஒருவருக்கு முடியுடை வேந்தனொருவன் அதியுயர் சிறப்புச் செய்த முதல் நாளும் இறுதி நாளும் சித்திரை மாசத்து ஆதிரை நாளேயாகும். பெரிய புராண அரங் கேற்றம் ஆரம்பமான நாளாகவும் பூர்த்தி யடைந்த நாளாகவும் அமைவதால் சித்திரை மாதத்து ஆதிரை நாள் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது

அந்நாளில் திருத்தொண்டர் புராணத்துக்கு விழா எடுத்தால் அது திருத்தொண்டர்களுக்கு விழா எடுப்பதாக அமையும்; திருமுறைகளுக்கு விழா எடுப்பதாகக் கருதப்படும். தொண்டர் சீர் பரவும் சேக்கிழாரைப் போற்றிப் புகழ்வதாக் கொள்ளப்படும். அநபாய சோழனுக்கு நன்றி செலுத்துவதாகும் அதனால் நாம் அனைவரும் சித்திரை ஆதிரை நாளை நினைவு கூருவோம்.

தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. 129

தீயினால் சுட்டபுண் வெளியே புண்ணாக நின்றாலும் மனத்தில் அப்பொழுதே ஆறிவிடும். ஆனால் நாவினால் (தீய சொல்லால்) சுட்ட வடு என்றுமே ஆறாது.

சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்

# உண்மை விளக்கம்

– மெய்கண்டார் அடியவன்

முத்திநிலை பெற்றோர் தன்மையை 46 ஆம் திருப்பாடல் பின்வருமாறு உரைக்கின்றது.

பா. 46

*முத்தி தனை அடைந்தோர் முந்துபழம் போது அங்கி*
*வித்தகமாம் வீணை இவையிற்றின் – ஒத்த*
*இரதம்மணம் வெம்மை எழில் நாதம் போல*
*விரவுவர் என்று ஓதும் விதி.*

முந்து பழம், போது, அங்கி வித்தகமாம் வீணை இவையிற்றின் ஒத்த ரதம், மணம் வெம்மை, எழில் நாதம் போல – முதிய பழத்திற் சுவையும் பூவில் மணமும், தீயில் சூடும், வீணையில் இன்னிசையும் அவ்வப் பொருளில் ஒன்றாய் வேறாய் உடனாய் அத்துவிதமாகக் கலந்து நிற்றல் போல முத்திதனை அடைந்தோர் விரவுவர் என்று விதி ஓதும் – முத்தி நிலை அடைந்தோர் இரண்டறச் சிவத்திலே கலந் திருப்பர் என்று விதி நூல்கள் சொல்லும் .

47 ஆம் திருவெண்பா சித்த மலம் அற்றார் முத்திதனில் நிற்கும் நிலையைக் கூறுகின்றது.

பா. 47

*தத்துவங்கள் எல்லாம் சகசமாய் ஆன்மாவில்*
*பெத்தத்தில் நிற்கின்ற பெற்றிபோல் – முத்திதனில்*
*சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்றுமறை*
*சத்தியமா ஓதியிடும் தான்.*

36 தத்துவங்கள் எல்லாம் ஆன்மாவில் பெத்தத்தில் சகசமாய் நிற்கின்ற பெற்றி போல், சித்தமலம் அற்றார் முத்தி தனில் சகசநிட்டையாய்ச் செறிந்திடுவர் என்று சத்தியமாய் மறை ஒதியிடும்.

பெத்தம் – பிறப்புநிலை பெற்றிபோல் – தன்மை போல; சகசமாய் நிற்றல் – இரண்டற நிற்றல்.

சூரியன் ஒளியில் நிலவின் ஒளி அடங்கி நிற்றல் போலத் 36 தத்துவங் கடந்த இறைவன் திருவடியை அணைந்த ஆன்மா இறைவனின் பேரின்பத்தில் அழுந்தி இன்புறும். இதனைப் பின்வரும் 48 ஆம் திருவெண்பா விளக்கு கின்றது.

பா. 48

*ஆதவன்தன் சந்நிதியில் அம்புலியின் ஆர்சோதி*
*பேதம்அற நிற்கின்ற பெற்றிபோல் – நாதாந்தத்து*
*அண்ணல் திருஅடியில் ஆன்மா அணைந்து இன்பக்*
*கண்ணில் அழுந்தியிடுங் காண்.*

ஆதவன் – சூரியன், சந்நிதி – முன்னர், அம்புலி – சந்திரன், ஆர்சோதி – பொருந்தும் சோதி. பெற்றி – தன்மை. பேதம் அற நிற்றல் – இரண்டற நிற்றல். நாதஅந்தம் – முப்பத்தாறு தத்துவங்களுக்கு அப்பால். இன்பக்கண் – சிவானந்தமாகிய நோக்கம்.

49 ஆம் திருவெண்பா முத்தி நிலையில் ஆன்மாவின் தன்மையை விளக்குகின்றது.

பா. 49

*சென்று இவன்தான் ஒன்றில் சிவபூரணம் சிதையும்*
*அன்று அவன்தான் ஒன்றும் எனில் அந்நியம் ஆம்*
*– இன்று இரண்டும்*
*அற்றநிலை ஏது என்னில், ஆதித்தன் அந்தன் விழிக்*
*குற்றம் அற நின்றது போல், கொள்.*

இவன் – ஆன்மா, அவன் – சிவன், விழி – உயிர், குற்றம் – மலம், ஞாயிறு – சிவம், ஞாயிற்றின் ஒளி – திருவருள், இவன் தான் சென்று ஒன்றில் சிவபூரணம் சிதையும் – ஆன்மா சிவனைச் சென்று பொருந்து மாயின் சிவனுக்கு பூரணத்துவம் இல்லையாகிவிடும். அவன்தான்

Virtue seeking for an opportunity will come into the path of that man who guards against anger and has learnt to control himself. 130

ஒன்றுமெனில் அன்று அந்நியமாம் – சிவன்தான் ஆன்மாவைச் சென்று பொருந்துமெனில் அப்பொழுது ஆன்மா வேறாய் இருத்தல் வேண்டும்; இரண்டும் அற்ற நிலை ஏது என்னில் – இரண்டு முறைமையும் அல்லாமல் நின்ற நிலை எப்படி என்றால்; இன்று ஆதித்தன் அந்தன் விழிக் குற்றம் அற நின்றது போல் கொள் – இப்பொழுது அந்தகன் விழியில் குற்றம் நீங்கியதும் சூரியனின் ஒளியை அவ்விழி பெற்றுப் பயன்பெறுமாறு போலக் கொள்.

இதுவரை அஞ்செழுத்து ஏது ? என்பதற்கு விடைபெற்ற சீடன் முடிவில் தான் ஆதல் ஏது ? என்பதற்குரிய விடையைப் பெறும் வகையை 50 ஆம் திருப்பாடல் காட்டுகின்றது. மெய்கண்ட குருதேவரை நோக்கி சீடனாகிய மனவாசகங் கடந்தார் மேலும் வினாவுகின்றார்.

பா. 50

*வாக்கு மனம் இறந்த வான் கருணை யாளன் உருத்*
*தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா! – நீக்காப்*
*பதியினைப் போல் நித்தம் பசுபாசம் என்றாய்*
*கதிஇடத்து மூன்றினையும் காட்டு*

இதற்குப் பின்வருமாறு குரு விடைபகர்ந்தார் என மனவாசகங் கடந்தார் 51 ஆம் செய்யுளை அருளியுள்ளார்.

பா. 51

*முத்திதனில் மூன்று முதலும் மொழியக்கேள்;*
*சுத்த அநுபோகத்தைத் துய்த்தல் அணு – மெத்தவே*
*இன்பம் கொடுத்தல் இறை; இத்தை விளைவித்தல் மலம்*
*அன்புடனே கண்டு கொள், அப்பா !*

50. வாக்கு மனம் இறந்த – மனவாசகங்கடந்த அதாவது பாசஞானம் பசுஞானம் அற்ற; கருணையாளன் – சிவன். உரு – குரு. தாக்கறவே நிற்கும் தனிமுதல்வா – உலகியலால் தாக்கப் படுதலின்றி நிற்கும் ஒப்பற்ற குரு முதல்வரே! நீங்காப பதியினைப் போல் பசு பாசம் நித்தம் என்றாய் – விட்டு நீங்காமலிருக்கும் பதியைப் போல பசுவும் பாசமும் நித்தியம் என்று உணர்த்தினீர்; கதி இடத்து மூன்றினையும் காட்டு – முத்தியிலும் அம்முப் பொருளும் அழியாமல் நிற்கின்ற முறையை அடியேனுக்கு விளக்கி அருளுக.

51. அப்பா – அப்பனே!; முத்திதனில் மூன்று முதலும் மொழியக் கேள் – முத்தி நிலையிலும் பதி பசு பாசம் எனப்படும் முப்பொருளும் அழிவின்றி நிற்கும் முறைமையைச் சொல்லக் கேள்! சுத்த அநுபோகத்தை – பேரின்பத்தை; துய்த்தல் – துய்ப்பது; அணு – ஆன்மா; மெத்தவே இன்பம் கொடுத்தல் இறை – மிகவும் பேரின்பம் நல்குவது இறைவன்; இத்தை – இப் பேரின்பத்தை; விளைவித்தல் மலம் – விளைவிப்பது மலம்; அன்புடனே கண்டுகொள் – இவ்வுண்மையை அன்புடன் உணர்ந்து கொள் (இத்தை – இதனை – பேரின்பத்தை)

“பேரின்பம் நுகர்தல் ஆகிய ஆன்மாவினது வினைக்கு மலம் தான் அவ்வான்மாவின் நீங்கி ஏனைப் பெத்தரிடத்து நிற்கும் திறத்தால் செய் விப்பதாகின்றது. ஆகவே விளைவித்தல் அம்மலத்துக்குரியதாயிற்று” என்பது சீலத்திரு ஞானப்பிரகாச தேசிகர் உரை விளக்கம். “அப்பனே ! முத்திக்கு அழியாத காரணம் தான் செப்பாய் என மனவாசகங் கடந்தார் கேட்க, மெய்கண்டார் விடை பகர்தல் 52 ஆம் திருப் பாடலில் உளது.

பா. 52

*“அப்பா ! இம் முத்திக்கு அழியாத காரணம் தான்*
*செப்பாய்; அருளாலே செப்பக்கேள் – ஒப்பில்*
*குருலிங்க வேடம் எனக் கூறில் இவை கொண்டார்*
*கரு ஒன்றி நில்லார்கள் காண்.*

மாணவ, திருவருளாலே சொல்லுகிறோம். கேட்பாயாக ஒப்பில்லாத குருலிங்க சங்கம வழிபாடு மூன்று முறையும் உண்மையாகக் கொண்டவர் இனிக் கருப்பத்திலே பொருந்திப் பிறந்து இறவார்கள் என்று அறிவாயாக.

குருலிங்க சங்கம வழிபாடு சீவன் முத்தர்க்கும் அவசியம் எனச் சிவஞானபோதம் பன்னிர ண்டாம் சூத்திரத்திலே சொல்லியருளியது

(தொடர்ச்சி 25 பக்கம்)

கதம்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து. 130

கற்றறிந்து, சினம் வராமல் காத்து, அடங்கி நடக்க வல்லவனின் செவ்வியை, அவனை யடையும் வழியில் சென்று அறக்கடவுள் பார்த்திருக்கும்.

# மீனாட்சியம்மை திருமணம்

– திருமுருக கிருபானந்தவாரியார்.

தங்கத்தை நிறுக்கத் துலாக்கோல் உண்டு, பாலைஅளக்க வேண்டுமானால் படியுண்டு, துணியை அளக்க வேண்டுமானால் அதற்கு ஒரு கோல் உண்டு. அது போல ஆளை நல்லவனா தீயவனா என்று அளக்க ஒரு கருவியுண்டு. அது எது? அவனவன் கண்களே ஆளை அளக்கின்ற அளவு கோல் என்று அறிக.

இவன் உண்டிருக்கின்றான், இவன் பசித் திருக்கின்றான், இரவில் கண்விழித்திருக் கிறான், கோபமாக இருக்கின்றான், மகிழ்ச்சி யாக இருக்கின்றான், மது உண்டிருக்கின்றான் ,துன்பத்துடன் இருக்கின்றான் என்று கண்கள் அறிவித்து விடும். வேறு நாசியைக் கொண்டோ, செவியைக் கொண்டோ அறிய முடியாது.

சீதாதேவியைக் கண்டவுடன் அம் மாதர சியின் கண்களினால் அவளைக் கற்புக்கரசி யென்று அநுமன் கண்டு கொண்டதாக அவர் இராமரிடம் கூறுகின்றார். எனவே, மனிதனை அளக்கும் கருவி கண் என உணர்க.

அம்பிகையின் நாமங்களில் பல கண்ணைப் பற்றியே அமைந்திருக்கன்றன. கமலாட்சி, பங்கஜாட்சி, வனஜாட்சி, நீலாதயதாட்சி, விசாலாட்சி, நீரஜாட்சி, ஜீவாட்சி, காமாட்சி, மீனாட்சி முதலியன. திருமாலையும் புண்டரீ காட்சன் என்பர். கண்ணன் என்ற பேர் எத்தனை அருமையுடையது.

அம்பிகைக்கு மீனாட்சி என்ற பேர் எதனால் அமைந்தது என்பதைச் சிந்திப்போம்.

ஆமை மணலில் முட்டையிட்டு, மணலால் மூடிவிட்டுத் தண்ணீருக்குள் செல்லும். மந்த மான அந்த ஆமை, சிலநாள் பொறுத்து, தான் இட்ட முட்டைகளை இருந்த இடத்தில் இருந்து கொண்டே நினைக்கும். நினைத்த மாத்திரத்தில் மணலில் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும்.

இதுபோல், குருநாதன் இமயத்தில் இருப்பார், சீடன் சிதம்பரத்தில் இருப்பான். சீடன் நலம்பெற வேண்டுமென்று அவர் அங்கிருந்து சிந்திப்பார். சிந்தித்த மாத்திரத்தில் சீடனுக்குச் சகல நலன்களும் விளையும். இது மானசதீட்சை யாகும்.

பறவை முட்டையிட்டு அடை காக்கும். அதன் பரிசத்தால் முட்டை வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும். அது போல் குருநாதர் சீடனைத் தமது ஒரு கரத்தால் தொட்டு ஞானத்தை வழங்குவார். இது பரிச தீட்சை.

ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்த ருடைய மார்பில் தமது திருக்கரத்தை வைத்து ஞானதானம் புரிந்தார்.

மூன்றாவது, மீன் வரிசையாக முட்டைகளை இடும். அவை முத்துக்களை கோத்தது போல் அழகாக இருக்கும். தாய் மீன் மீளவும் அவற்றைப் பார்க்கின்ற வரை அவைகள் அப்படியே இருக்கும். தாய்மீன் தன் கண்களால் அம்முட்டைகளைப் பார்க்கும், மீன் கண்களி லிருந்து ஒளி முட்டைகள் மீது பட்டவுடன் முட்டைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிப்படும் தாய் மீன் நடுவில் செல்லும். இருபுறத்தும் மீன் குஞ்சுகள் செல்லும். எதிரிலே வரும் சிறிய மீனைப் பெரிய மீன் ஆன தாய்மீன் உண்ணும், பக்கங்களில் உள்ள சேய் மீன்களைத் தாய் மீன் பார்க்கும், பார்த்த மாத்திரத்தில் சேய் மீன்கள் பசியாறும். “பார்த்தால் பசி தீரும்” என்பது பழமொழி. அது மீன்களுக்காக ஏற்பட்டது. மனி தனுக்குரியதன்று. பலகாரக்கடையை, சாப் பாட்டுக் கடையை- மனிதன் கண்ணால் பார்த்தால் பசியாறுமா? ஆறாது. உண்டால் தான் பசியாறும். குருநாதன் சீடனுக்குப் பார்வை யால் ஞானத்தைத் தருவார். இது நயன தீட்சை யாகும்.

தாய் மீன் பார்த்துத் தன் சேய் மீன்களைக் காப்பது போல், எம்பெருமாட்டி தன் கடைக் கண் பார்வையால் அகில உலகங்களையும் காத்தருளுகின்றார்

“கரைபொழி திருமுருக கருணையால் உலகெழு கடனிலை பெறவளர் காவேந்திய பைங்கிளி மாசாம்பவி”

என்கிறார் அருணகிரிநாதர்.

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுதரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனந்தரும் நல்லன எல்லாந்தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழாள் அபிராமிகடைக் கண்களே.

– அபிராமியந்தாதி

மீனாட்சியம்மையை இறைவன் மதுரையில் திருமணஞ் செய்து கொண்டார்.

“ இறைவனுக்குத் திருமணம் தேவையா? சுவாமிக்கும் மனைவி மக்கள் உண்டா? திருக் கோயிலில் ஆண்டுதோறும் திருமண விழா நடை பெறுகின்றதே அது ஏன்? அம்மன் கழுத்தில் சுவாமி தாலி கட்டுகின்றாரா? குருக்கள் தானே கட்டுகின்றார். ஆண்டு தோறும் திருமணம் என்றால், வெவ்வேறு தாலி என்றால் எத்தனை தாலிகள்! ஒரே தாலியென்றால் இருக்கின்றது அப்படியே இருக்கட்டுமே, அதனையேன் அவிழ்த்துக்கட்டவேண்டும்? இவையெல்லாம் அறிவுக்குப் பொருந்தாதவை” என்று வாதிப் போரும் உளர்.

திருமணம் விலங்குகட்கு இல்லை. விலங் குகள், தாய், தங்கை, மகள் என்ற முறையின்றி வாழும். மனிதன் புனிதமான வாழ்வை நடத் துபவன். இவள் தாய், இவள் உடன் பிறந்தாள், இவள் மனைவி, இவள் மகள் என்ற முறை மையுடன் வாழ்பவன்.

ஆசிரியர் மாணவனுக்குக் கணக்குச் சொல்லிக் கொடுக்கும் போது ஐந்தும், மூன்றும் எட்டு என்று தன் விரல்களை விட்டு எண்ணிச் சொல்லிக் கொடுப்பார். மாணவன் வீட்டில் போய் “ஆசிரியர் சுத்த மக்கு, அவரும் விரலை விட்டு விட்டுத்தான் எண்ணிப் பார்க்கின்றார்” என்று சொன்னால், அம்மாணவன் அறிவை என் னென்றுரைப்பது? நம் பொருட்டு இறைவன் தன்னைவிட்டுப் பிரிவிலாத எம்பிராட்டியைத் திருமணம் செய்து காட்டுகின்றார். உண்மையில் அது நமது திருமணம்போன்றதன்று. இறைவ னுடைய பெருங் கருணை தான் சக்தி.

சிவம் வேறு சக்தி வேறு அன்று. சிவமும் சத்தியும் தாதான்மியம் என உணர்க.

உமாதேவியார் கருவிருந்து ஒரு மகவை யீன்றாள் என்று வரலாறு உண்டா?

“பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னியாகும்” என்று சிவஞான சித்தியார் கூறு கின்றது.

அவள் “உண்ணாமுலை” ஒரு குழந்தையும் வாய் வைத்து அருந்தாத இளமுலை நாயகி. விநாயகர், வீரபத்திரர், வைரவர், வேலவர் இந்நாங்கு சிவகுமாரர்களும் சிவபெருமா னுடைய திருமேனியிருந்தே தோன்றினார்கள். பார்வதியம்மை கருவிருந்து வளைகாப்பிட்டுப் பிரசவ வேதனையுற்றுப் பிறந்தவர்கள் அல்லர். அவள் என்றும் கன்னியாகும்.

“அகிலாண்ட கோடியீன்ற அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே.”

என்கின்றார் தாயுமானனார்.

## வரலாறு

பாண்டி நாட்டின் தலைநகரம் மதுரையம்பதி. அது துவாதசாந்தத் தலம். 64 சக்தி பீடங்களில் தலை சிறந்த சியாமளா பீடமாக விளங்குந் தலம். அந்நகரை மதிகுலமன்னன் மலயத்துவஜ பாண்டியன் மநுவறம் தன்வழிச்செல அரசு புரிந்தான்.

விச்சாவதி என்ற யட்ச மகள், தந்தைபால் உபதேசம் பெற்று, மதுரையில் அங்கயற் கண்ணம்மையின் திரு முன் பன்னிரு மாதம் தவம் புரிந்தாள். அம்பிகை தோன்றி “என்ன வரம் வேண்டும்” என்றார். “தாயே நின் திருவடியில் மாறாத அன்பு ஒன்றே வேண்டும்” என்றாள் அவள்.

“ அவ்வரம் வழங்கினேன், வேறு வரமுங்கேள்” என்றாள் எம்பிராட்டி. விச்சாவதி, “ தாயே! நீ எனக்கு மகளாக வரவேண்டும்” என்று வேண்டினாள்.

அம்பிகை அருள் சுரந்து “ நீ மறுபிறப்பில் சோழ மன்னவனுக்கு மகளாகப்பிறந்து,

காஞ்சனமாலை என்ற பேருடன் வளர்ந்து, பாண்டிய மன்னனை மணப்பாய். அப்போது வேள்வியில நான் தோன்றி நின் மகளாக வளர்வேன்" என்று வரமளித்தாள்.

அந்த வரத்தின்படி விச்சாவதி என்ற தவமாது, சோழன் மகளாகப் பிறந்து, காஞ்சனமாலை என்ற நாமந்தாங்கி, மலயத்துவஜனை மணந்து, பிள்ளைப் பேறு வேண்டித் தவஞ் செய்தாள்.

மலயத்துவஜன் புரிந்த புத்திரகாமேஷ்டி என்ற வேள்வியில், அகில லோகமாதா மரகதச் சிலை போல் தோன்றியருளினார். தடாதகையென்று நாமஞ் சூட்டினான். குழந்தைக்கு மூன்று தனங்கள் இருக்கக்கண்டு பாண்டியன் வருந் தினான். கணவனார் வரும் போது ஒரு தனம் மறையும் என்று வானொலி வழங்கியது.

புதல்விக்கு உரிய காலத்தில் அரிய மகுடா பிஷேகம் புரிந்தான். மன்னனின் மகளுக்கு மண்ணு லகம் ஈந்து, பொன்னுலகம் பெற்றான்.

தடாதகைப் பிராட்டியார் திக்கு விஜயம் புரிந்து, மன்னர்கள், திசைபாலர்கள், பிரமா,திருமால் முதலியோரை வென்று திருக்கயிலை சென்றார். அங்கு சிவபெருமானைச் சந்தித்தார். நடுவில் உள்ள தனம் மறைந்தது. சிவபெருமான் மதுரை போந்து, சோமவாரத்தன்று, தேவரும், மூவரும், யாவரும் போற்றத் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்து கொண்டு, எல்லா உயி கட்கும் அருள் புரிந்தார்.

# உண்மை விளக்கம் .......

(22ம் பக்கத் தொடர்ச்சி

போலப் பின்வரும் 52 ஆம் உண்மை விளக்கத திருப்பாடலும் வற்புறுத்தி யுரைக்கின்றது.

பா. 53

*கற்றா மனம் போல் கசிந்துகசிந் தேஉருகி*
*உற்று ஆசான் லிங்கம் உயர்வேடம் - பற்றாக*
*முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்*
*பத்திதனில் நின்றிடுவர் பார்.*

கன்று + ஆ = கற்றா. கற்றா மனம் போல் – கன்றை உடைய பசுவைப் போல்; கசிந்து கசிந்து உருகி உற்று, ஆசான் – சிவகுரு; லிங்கம் – சிவலிங்கம், கோயில்; உயர்வேடம் – உயர்ந்த சிவ வேடம் – பற்றாக – பொருளாகக் கொண்டு; மோசிக்கும் – நீக்கும்.

உண்மை விளக்க இறுதி 54 ஆம் திரு வெண்பாவில் மன வாசகங் கடந்தார், "நாதனே!, பயனே!, கடலே!, வாழ்ந்தேன்". என நன்றி பகர்கின்றார்.

பா. 54

*வாழ்ந்தேன் அருட்கடலே! வற்றாப் பவக்கடலில்*
*வீழ்ந்தேன் அலையாமல் மேதினியில் - சூழ்ந்துவிடா*
*வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே!*
*உண்மைத் தவப் பயனே! உற்று.*

வெண்ணை – திருவெண்ணெய் நல்லூர்; சுவேதவன. மெய்கண்ட நாதனே – சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமம் உள்ள மெய்கண்ட நாதரே; அருட்கடலே – திருவருட் கடலே; உண்மைத் தவப்பயனே – உண்மையான தவஞ் செய்தோர்க்குப் பயனா யுள்ளவரே; வற்றாப்பவக்கடலில் வீழ்ந்தே மேதினியில் அலையாமல் உற்று வாழ்ந்தேன் – வற்றாத பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து உலகவியலிலே சுழலாமல் உமது திருவடியை அடைந்து வாழ்ந்தேன்.

உண்மை விளக்கச் சிறப்புப்பாயிரம் பின்வரும் வெண்பா

*மன் அதிகை வாழும் மனவா சகங்கடந்தான்*
*மின் அனையார் வாழ்வில்உறா மெய்கண்டான்*
*- பன்மறைகள்*
*வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா*
*உண்மை விளக்கம் செய்தான் உற்று*

திருச்சிற்றம்பலம்

# UMADEVI'S PENANCE

- V. Sivarajasingam..

## INTRODUCTION

Kanthapuranam, a religious epic is one of the greatest literary epics in Tamil. It mainly describes the story of the rescue and redemption of the celestials from the cruel subjugation and atrocities committed on them by the Asuras whose indomitable leader Surapathma is eventually defeated and slain by Lord Skanda.

The epic sings of the glory, grace and beatitude of Lord Skanda in rich melodious language.

The author of this immortal epic is Kachiappa Sivachariar who funtioned as the priest of Sri Murukas shrine in Kanchipuram ,Tamil Nadu. It is believed that Lord Skanda himself initiated the task of composing the epic, on the author's behalf.

The epic (or purana as it is usually called) consists of six canto's comprising 10,345 stanzas in all.

Apart from the chief episode of the fight between Lord Skanda and Surapathma and consequent redemption of the clestials the epic contains several other episodes such as the wedding of Siva and Uma and the nuptial tie of Lord Skanda with Theivayanai and Valliammah (the adopted daughter of the Veddha Chief) .

The book teems with several sorts of sermons, epigrams and anecdotes. It is a treasure trove of diverse religious and philosophical ideas exposed in clear terms.

The present attempt to give an outline of the magnum opus is aimed at providing a general view of the contents to those who are not very familiar with Tamil, but who may be interested in knowing something about the work. With Lord Skanda's blessing, let us hope it will make interesting reading.

## PAER TO VINYAGA

Adoration to the holy feet of the Lord with ten arms and five facesto Him in whose waist - band. Sun - God rests asdeamond stud. To Him who bears the name of Vikata Chakkara Vinayaga.

## PAER TO SUBRAMANIA

*Obeisance to the Twice Three faces*
*Obeisance to the grace flowing from the Six faces.*
*Obeisance to the shoulders held in admiration by all.*
*Obeisance to the Lord residing at Kanchimango grove.*
*Obeisance to the cock banner and the peacock vehicle.*
*Obeisance to the shining Javelin resting in His hand.*

Mount Kailas Stands majestically - aloft licking the sky with its snow capped peaks. It is the abode of Siva the omnipotent Lord. It abounds with innumerable Rishis and Devas . Around it are the cities of Indira and other regents of the spheres. Seated with her Lord in the shrine on top of the mount, consort Uma one day addressed Him thus."Almighty Lord I had been living with Dhaksha who had the audacity to abuse you, in his house eating the food provided by him.I feel contaminated by his evil thoughts and ways . I deem it a calumny to be considered his daughter. Wherefore I earnestly pray that you help me to get rid of this stigma". "You are right in your thought, Fair one",

replied Siva with a gentle smile. "The King of Himalayas is doing great penance in order to have you as his daughter. If you so desire, you approach him as a child.while you grow up in his mansion as his daughter, you may engage yourself in penance with a view to reaching me. I will come to you at the proper hour, wed you and take you back to Kailas. Uma received these words with mixed feelings. She was sad to be parted from her Lord, but was happy to be got rid of the blemish of being the daughter of Dhaksha. Instilled by the love for her Lord and com -passion fot the inhabitants of the world at large Umadevi left Mount Kailas and proceeded to the Himalayas. The snow - clad Himalaya Mountain with blue clouds floating constantly over its peaks resembled the serpent abode of Lord Vishnu and Luckshumi encircled by the milky ocean.

The King of Himalayas was engaged in doing penance in a beautiful pond on a slope of the mountain with the view to be blessed with the boon of having Umadevi as his daughter and then getting her wedded to Lord Siva. In front of him , on a lotus flower appeared the Goddess Mother of the whole world, as a lovely child. The thought that Uma had deserted Siva to be his child was painful to the King. He even blamed himself for having performed such severe penance that had resulted in separation of the supreme Lord and Lady. However he comforted himself with the belief that it's all God's design with the common weal in mind and salvaged from grief thus, he floated on bliss. He lifted the child that lay in the flower bed carried it home and gave it unto his Queen who found no words to express her joy.

It is indeed in materialistic parlance we say that the Royal couple brought up the child, for it is the mother Uma's grace that protects and looks after us.

As soon as the child Uma reached five years of age she told her adopted parents of her desire to perform penancewith a view to attaining Lord Siva's favour." It does not behave you my child to set your mind on such severe and enormous task at such a tender age" said the King to Uma. Therefore give up the idea of penance for the time being. Umadevi smiled at these words and said "It is Eswara who protects us all. One cannot guard oneself without the benign grace of the Universal Guardian. The idea of penance was indeed induced by the Lord's grace. Hence let there be no objection to my plan". The Himalayan King spoke no further but made the necessary arrangements for her daughter to perform the penance. He put up an enclosed stall and sent as bevy of maiden as companions. Umadevi took leave of her parents, entered the penance hall accompanied by a group of lasses and started praying.Meanwhile at Mount Kailas the four sages Janaka, Sanathana, Sananthara and Sanathkumara fell prostrate at the feet of Lord Siva and said,Lord Almighty we have gone through the whole gamut of the entire sacred works, the four scriptures the twentyeight agamas and the related works. We have been tossed about on the sea of scriptures by the storms of.delusion caught in the darkness of ignorance, feel blindfolded and placed in a confounded state. We earnestly entreat you to enlighten us on the ultimate truth". The Lord acceded to the request of there ascetics with spotless penance sat himself under a pippal tree bidding them to be seated before Him. In an atmosphere of perfect serenity ordering Nandhi Deva not to allow anyone into the enclosure,. Siva started expounding the intricate and mysterious realities capsulated in the sivagamas. On completion of the exposition of the three paths of attainment viz Charia, Kriya and Yoga, the ascetics requested the Lord to make clear to them the Gnana Marga. Siva without replying closed his eyes kept a hand against his heart and sat like a yogi in perfect composure for a few moments, signifying to them the esorteric implication of

gnanamuthra. When the Lord represented through the nature of gnanam the ascetics realized that such supreme mystic knowledge could not be attained through book learning.

While the Lord was engaged thus in enlightening the sages about the device of concentration and spiritual meditation the whole world was rendered desireless, bereft of carnal yearnings. On the extreme Siva sat motionless an embodiment of impassivity. In Himalayas Umadevi too sat motionless mentally chanting Siva's various names intermittently repeatingPanchaksara.,

"In such a situation, how can we expect a son from Siva thought Indira, the chief of the celestials.

Along with Brahma, he approached Vishnu and complained of his grievance. Lord Vishnu listened patiently and said "If Siva our over Lord as well as the cause of all creations were to remain immersed in profound contemplation oblivious of the world's happenings with all his activity inward turned, there is no possibility of his turning towards love. I will tell you of a plan. Send Manmatha the god of love to Siva to induce him and awaken his feelings by shooting flower shafts that would kindle his passion for Uma. This appeared to be a good suggestion to Indira. Together with Brahma the Lord of the clouds (Indira) approached Manmatha and broached the subject of their plan. Though the God of desire first protested, he finally yielded to the coaxings and caplings of Indira.Manmatha set out with his wife Rathy to the mountain where Siva dwelt. It was spring and the trees were putting forth new colourful flowers, birds and beasts were mating. Only Siva remained unmoved in his mystic silence.

Even Manmatha was daunted at the sight of Siva's loveliness however he took courage. He chose a moment when Siva seemed to relax his concentration. He stringed his bow and was about to shoot. Lord Siva saw him and darted a flash of fire from his third eye consuming Manuratha utterly Rathi, Kamas, Devas consort fell unconsious,but regaining her senses soon she entreated Siva to give back her husband's life.Siva graded her request with some limitation." His life will be given back to you on the day when Uma becomes my lady. From that time he will be unseen by others though visible to you". So saying he again sank into repose.

Indira, Brahma and the other gods who had been watching all these from a distance, were utterly struck with grief and remorse. "We sent Kamadeva with the intention of distracting the Lord from his yogic involvement. Not only has our plan misfired but it has cost the life of our cherished Kamadeva. It is unfortunate that God Siva has not renounced his yogic state". Then they came to the conclusion that the only way of redemption is to appeal to Lord Siva with the permission of Nabdhideva. They approached the Lord and making a submission of their grievances begged him not to make any further delay in saving them from the Asura. They particularly reminded LordSiva of the promise he earlier made to beget a son in his own form and statue. Be merciful O Lord! will you not consider the pathetic plight we are in? How long can we bear the atrocitiesof the Asuras? We are daily dying inch by inch by the inhuman, ill - treatment of Surapathma Deign to drive our sorrows O Lord!." Lord Siva glanced at them with grace shedding eyes and spake thus "Your request will be granted and your sorrows will cease with the appearence of Skanda ".

The devas felt happy and took leave of the Lord and retired to their respective abodes.

## உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

கல்வி பயிலாமல் ஒரு நாளும் இருக்க கூடாது, எவர் மீதும் அவதூறு சொல்லக் கூடாது, தாயை ஒரு நாளும் மறக்கக் கூடாது, வஞ்சகர்களோடு தொடர்பு கொள்ளக் கூடாது, போகத் தகாத இடத்க்குப போகக்க டாது, இருக்கும் பொழுது புகழ்ந்து கூறி,இல்லாத போது குறை கூறக்கூடாது. வலிமை மிக்க குறவர் குடியிலே பிறந்த வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெமாளை வாழ்த்துவாய் மனமே!

## சைவநீதி மாத இதழ்

### பெறுமதி விபரம்

தனிப்பிரதி
இலங்கையில் ரூபா 25.00

ஆண்டொன்றிற்கு
ரூபா 250.00

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் **10** அல்லது **US$15.**

இவ்வருடத்திற்கான சந்தா அனுப்பாதவர்கள் அனுப்பி வைக்கும்படி அன்பாக வேண்டுகிறோம்.

காசோலை **"SAIVA NEETHY"** என்ற பெயருக்கு எழுதவும். காசுக்கட்டளை "மணிமலர் முகவர் தபாலகம்", கொழும்பு – 13, தபாற்கந்தோரில் மாற்றக் கூடியதாக அனுப்பவும்.

**சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.**

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி:*

**C. NAVANEETHAKUMAR**
42, Janaki Lane,
Colombo - 04.
Sri Lanka.
T el: 078 - 626882




**Regd. No. QD/19/ News 2001** இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினால் இல. 195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13, லகக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 04 -04 - 2001 இல் வெளியிடப்பட்டது.